1204

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1 - JUN 1956
MADRAS

வேதவல்லித்தாயார் :: ஸ்ரீ ரங்கநாதன்
திருவல்லிக்கேணி.

1204
2-56
N56 155
210728

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	108
2. மஹாவீரவைபவம் [ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி. வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	111
3. தேச உலக ரக்ஷை [ஸ்ரீ.உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, M.O.L. திருப்பதி.]	115
4. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]	119
5. திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம் [ஸ்ரீ. உப. ஒரகடம், கோ. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி. அவளூர்.]	123
6. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	127
7. ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமி [ஸ்ரீ. உப. T. S. சேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமி. தில்லைஸ்தானம்.]	130
8. பஞ்சாங்க ஸங்க்ரஹம்	132

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமத் தொடர்ச்சி

10–5–56 ராத்திரி நெல்லூரிலிருந்து புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள புச்சிரெட்டி பாளையம் எழுந்தருளினர். 11–5–56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள ஸங்கம் சத்திரத்திற்கெழுந்தருளியாயிற்று. 12–5–56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 13- மைல் தூரமுள்ள ஆத்மகூர் எழுந்தருளியாயிற்று. 13–5–56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு நந்தவரம் பங்களாவிற்கெழுந்தருளினர். அங்கிருந்து பத்வேலி, மைதுகூர், சாகலமர்ரி வழியாக 21–5–56 க்கு அஹோபிலம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியாகியிருக்கிறது.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ௵ வைகாசி ௴ { ஸஞ்சிகை 5

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌦𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஹிந்துமதம் என்பது தத்வஜ்ஞான ஸம்பாதனம் மட்டும் அல்ல. ஸமூஹத்தில் உள்ள ஒவ்வொருவருக்குமேற்பட்ட தர்மகர்மாநுஷ்டானக்களைச் சரிவரபின்பற்றுதலுமாகும்.

ஸமூஹ சீர்திருத்தங்கள்

ஒருவன் பலவித சாஸ்த்ரங்களைக் கற்று பண்டிதனாக இருந்தபோதிலும், நல்ல அநுஷ்டாதாவாக இல்லாமற்போனால் அவனால் ஸமூஹத்திற்கும் அவனுடைய பரலோக வாழ்க்கைக்கும் ஒருவித ப்ரயோஜனமுமில்லாமல் போகும். முற்காலத்து மஹர்ஷிகள் இவைகளை மனதிற் கொண்டுதான் ஸமூஹத்தை யமைத்திருந்தனர். இஹலோகவாழ்க்கைக்கு வேண்டிய அளவு பொருளாதார முன்னேற்றத்தையும், பரலோக ஸுகத்துக்கின்றியமையாத தத்வஜ்ஞான முன்னேற்றத்தையும் காப்பாற்ற பற்பல பாடுபட்டு வந்தனர்.

நவீனபொருளாதார நிபுணர்களும் கூட ஸமூஹநலனுக்காக, தொழிற் பாகுபாடு அவச்யம் என்றும், ஸமூஹத்திலுள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் தகுந்தபடி தங்கள் தொழிலை சீர்படுத்திக் கொள்ள வேண்டும். இம்மாதிரி பாகுபாடு இல்லாத ஸமூஹம் முன்னேற்றமடைவது கடினமென்று கூறுகிறார்கள். இதேபோல் ஆண், பெண் பாலர்களுக்கும் இயற்கையாக ஏற்பட்ட சரீர அமைப்பு முதலிய காரணங்களால் தங்கள் தங்கள் கார்யங்களை அமைத்துக் கொண்டனர். ஆழ்ந்த அறிவினாலும், அநுபவத்தினாலும், அபூர்வமான ஜ்ஞான த்ருஷ்டியினாலும் முற்காலத்து தபஸ்விகள் நமது ஸமூஹ அமைப்புக்கும், முன்னேற்றத்திற்கும் காரணமாயிருந்தனர் என்பதை நவீனகாலத்து மனப்பான்மை ஒப்புக்கொள்ள இஷ்டப்படவில்லை.

ஆத்மஜ்ஞான வளர்ச்சிக் குறைவும், அதில் அநாதரவும் ஏற்பட ஆரம்பித்தவுடன் ஸமூஹ அமைப்பில் பெரிய மாறுதல்கள் தோன்றவாரம்பித்தன.

சுமார் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு மேற்கத்திய நாடுகளில் தோன்றிய சமத்துவம் போன்ற கொள்கைகள் புதுப் புது விதங்களில் வ்யாக்யானம் செய்யப்பட்டன. பழைய அமைதிக்குக் காரணமான கட்டுப்பாடுகள் நிராகரிக்கப்பட்டன. இயற்கையை எதிர்த்துப் போராட்டமும், பழைய கட்டுப்பாடுகளை ஒழிக்கும் இயக்கமும் அதிகரித்திருக்கின்றன. இவைகளின் முடிவுகள் சுகமின்மையும், அமைதியின்மையும் தான்.

மனிதன் பாடுபடுவதெல்லாம் உலக சுகத்துக்காகவே என்ற கொள்கை தலை தூக்கி நிற்கிறது. அப்படியாவது ஸமூஹத்திற்கு சுகம் ஏற்படுவதானால் நல்லது. அதுவும் இல்லை. உலகநாடுகள் பரஸ்பரம் நல்ல எண்ணத்துடன் இல்லாமலும், நாசக்கருவிகளை உற்பத்தி செய்து கொண்டும் ஸமூஹத்திற்கே பேராபத்தை விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

ஸமீபத்தில் சுதந்திரம் அடைந்த நமது நாடு உலகநாடுகளின் மத்தியில் அமைதிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாக பலர் புகழ்வதை நாம் கேட்டு, ஸந்தோஷிக்கலாம். ஆனால் அரசாங்கப் போக்கை ஊன்றி கவனித்தால் எல்லா அம்சங்களிலும் நாம் பெருமைப் படும்படியான சீர்திருத்தங்களே நடந்து வருகின்றன என நாம் சொல்லுவதற்கில்லை.

வெளிநாட்டுக் கொள்கைகளில் நடுநிலைமைக் கொள்கையை அவலம்பித்து ஓர் உயர்ந்த மத்யஸ்த நாடாக விளங்குகிறதென்பதில் ஸந்தேஹமில்லாமலிருக்கலாம். ஆனால் உள்நாட்டு வ்யவஹாரங்களில் காணப்படும் பற்பல சீர்திருத்தங்களைப் பராமர்சித்தால் நாம் பற்பல சமயங்களில் கவலைப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

ஸமூஹசீர்திருத்தம் என்ற பெயரில் பல சட்டதிட்டங்களை இயற்றி வருகிறார்கள் அல்லவா? உதாரணமாக ஹிந்து வாரிசு உறிமை மசோதா சில தினங்களில் சட்டமாக மாறி, அமுலுக்கு வரவிருக்கிறது. இந்த மசோதாவில் நமது ஸமூஹ அமைப்பை பாதிக்கும் வகையில் பல அம்சங்கள் காணப்படுகின்றன.

புராதன ஸ்ம்ருதிகளின் போக்கை அநுஸரித்து சட்டங்கள் ஏற்கனவே இயற்றப்பட்டிருந்தன. நவீன மனப்போக்கை அவலம்பித்து 'சமத்துவம்' என்ற ஓர் கொள்கையின் விபரீத வ்யாக்யானத்தை அநுஸரித்து நமது குடும்பவாழ்க்கைகள் மாற்றப்படவிருக்கின்றன.

ஓர் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு இதுவரை தகப்பனாரின் ஸ்தாவர சொத்தில் உறிமை இருந்ததில்லை. ஆனாலும் ஸ்தாவர சொத்தில் ஒரு பெண்ணுக்கு, ஸஹோதரன் போல எவ்வளவு பாகம் கிடைக்குமோ அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகவே ரொக்கமாகவும், நகை, பாத்திரங்கள் போன்ற ஜங்கம சொத்து வகையிலும் கிடைத்து வந்திருக்கிறது. ஸ்தாவரசொத்தே இல்லாத ஒரு குடும்பத்தில்கூட பிள்ளைகளைக் காட்டிலும், பெண்களுக்கு அதிக சலுகைகள் காட்டப்பட்டு வருகின்றன என்பதுதான் உண்மை.

மேனாட்டு நாகரிகத்தைக் கண்டு மோகங்கொண்டவர்களும், மேனாட்டு முறையை அநுஸரித்து கல்வி பயின்றவர்களுமான ஆண்களும் அதேபோன்ற பெண்களில் சிலரும் இம்மாதிரியான சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்டிருப்பது ஸமூஹத்தின் நன்மைக்கல்ல என்பதுவே பல பெரியோர்களின் கொள்கை. இந்த சீர்திருத்தவாதிகள் வெறும் ப்ரசாரத்துடன் நிற்காமல் அரசியலில் புகுந்து, பெருவாரியான சட்டசபை அங்கத்தினர்களின் ஆதரவையும் பெற்று, ஸமூஹ நலனுக்கு அவசியமில்லாததான இம்மாதிரியான சட்டங்களை இயற்றி வருவது முறையல்ல. சட்டசபை அங்கத்தினர்கள் தங்களை மனுவாகவும் யாஜ்ஞவல்க்யராகவும் எண்ணிக்கொண்டு கார்யங்களை நடத்தி வருவது நமது காலவித்யாஸம் தான். ஸமூஹ சீர்திருத்தம் அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கூறுவார்கள் அரசியலார். ஆனால் இம்மாதிரி விஷயங்களில் தங்கள் கருத்துக்களை ப்ரசாரம் செய்ய அவர்களுக்கு உரிமை இருக்கலாமே தவிர சட்டமியற்ற உரிமை இருத்தல் கூடாது. இம்மாதிரி சட்டமியற்றியதால் இதுவரை ஹிந்து குடும்பங்களில் நிலவிவந்த அமைதியும், ஸௌஜன்யமும் இனி குறையும் என்பதில் ஸந்தேஹம் வேண்டாம். வ்யவஹாரங்களும், மனத்தாங்கலுமே அதிகரித்து குடும்பப் பிரிவினைக்கு அடிகோலும்.

இதுவரை ஸமூஹசீர்திருத்தம் என்ற பெயரில் இயற்றப்பட்ட பல சட்டங்கள், எவ்விதமான நிலையில் அமுலில் இருக்கின்றன என்பதை பொதுமக்கள் அறிவர். இச்சட்டங்கள் எந்த தீய வழக்கங்களை ஒழிக்கும் எனக் கூறப்பட்டு இயற்றப்பட்டனவோ, அத்தீய வழக்கங்கள் வேறு இடங்களிலும், வேறு ரூபங்களிலும் மாறி இருக்கின்றன. ஸமூஹத்திலிருந்து ஒழிக்கப்பட்டதாகக் கூற முடியாது.

ஹிந்துவாரிசு உரிமை மசோதாவும் அதே நிலையைத்தான் அடையும். மனிதன் தன் அறிவினால் இப்படி வரும் சட்டங்களை எவ்விதமான யுக்தியினால் புறக்கணிக்கலாம் என்று தீவிரமாக எண்ணி அதற்கு வேண்டிய வழிகளைக் கையாள ஆரம்பிப்பான். அதன் முடிவு குடும்பங்களில் சச்சரவுகள் அதிகமாகி வ்யவஹாரஸ்தலங்களின் வேலை அதிகரிக்கும்.

ஸமீபத்தில் மத்திய அரசாங்கம் மற்றொரு விஷயத்தை ஆலோசித்து வருவதாக செய்தித்தாள்கள் மூலம் நாம் அறிய நேர்ந்தது. ஆலயங்கள் தர்மஸ்தாபனங்கள் இவைகளின் உபரி வருமானத்தை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் பணத்தேவைக்கீடு செய்துகொள்ள வகைகளை ஆராய்வதாக ஓர் செய்தி வந்தது. இது எவ்வளவு அநீதியான விஷயம் என்பதை சென்ற மாதம் நாம் விளக்கியிருந்தோம்.

ஸமூஹத்தில் ஆஸ்திகத்துறையில் ஈடுபட்டு வரும் மக்களின் கருத்துக்களைப் புறக்கணித்து அவர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சட்டங்களை இயற்றுவது உண்மையான ஜனநாயகத்திற்கு அழகல்ல.

* * *

ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியின் மறைவு

ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமி என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் சடகோபராமாநுஜயதீந்த்ர மஹாதேசிகன் சென்ற சித்திரை மீ 22உ வெள்ளிக்கிழமை ஸ்ரீரங்கத்தில் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினார்.

இந்த ஸ்வாமி ஸ்ரீஸந்நிதியில் பலகாலம் கைங்கர்யம் செய்துவந்து திருக்குடந்தை ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபங்களைச் செய்து 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ஆச்ரம ஸ்வீகாரமும் செய்துகொண்டார்.

தமிழ் ஜில்லாக்களிலும் பெங்களூரிலும் பல வர்ஷகாலங்கள் எழுந்தருளியிருந்து பல ஸ்வாமிகளுக்கு ஸம்ப்ரதாய க்ரந்தகாலக்ஷேபாதிகளை ஸாதித்தும் ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயத்தைத் தழைத்தோங்க உபகரித்து வந்தார்.

ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபா விசேஷத்தினால், இந்த ஸ்வாமி ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில் சில காலம் வஸித்து வந்தார். சில மாதங்களாக திருமேனியில் அபாடவம் ஏற்பட்டு சிரமப்படும்படி நேர்ந்தது.

இம்மாதிரியான மஹான்கள் நமது ஸமூஹத்திலிருந்து மறைவது வைதிக ஸமூஹத்திற்கும் விசேஷமாக நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கும் ஓர் துர்தசையாகும்.

ஸ்ரீஸ்வாமியின் கைங்கர்யங்கள் ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் விசேஷமாக நடைபெற்றுவருகின்றன. * * *

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலைகள்

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருதராய், ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கரின் பரமக்ருபாகார்யமான, ஸ்ரீமதஹோபிலமடத்தின் பாடசாலைகள் மதுராந்தகம் போன்ற எட்டு இடங்களில் செவ்வென நடந்து வருகின்றன.

மதுராந்தகம் சாஸ்த்ர பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு பல வர்ஷங்கள் ஆனபோதிலும், நவீன முறைப்படியும், குருகுல முறையிலும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் சில மூன்று வர்ஷங்களைப் பூர்த்தி செய்கின்றன, சில இரண்டு வர்ஷங்களைப் பூர்த்தி செய்கின்றன.

மேற்கூறிய எட்டு பாடசாலைகளும், அந்த அந்த ஊரில் உள்ள இதர பாடசாலைகளைக் காட்டிலும் உயர்ந்த முறையில் பாடங்களை போதித்து வந்திருக்கின்றன என்பது ஆங்காங்கு உள்ள பிள்ளைகளின் பெற்றோருக்கு நன்கு தெரியும்.

ஸமீபத்தில் மேற்படி பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் வர்ஷபரீக்ஷை ஸமகாலத்திலேயே ஒரே ரீதியில் நடந்தது. பெரும்பாலுமது த்ருப்திகரமான நிலையை எடுத்துக்காட்டுகிறது.

வரும் வர்ஷத்தில் மேற்படி பாடசாலைகளில் மேல் வகுப்புக்கள் ஆரம்பிக்கவிருக்கின்றன. பிள்ளைகளுக்கு வைதிகாசாரம் பழகுவதோடு கல்வி நிலையிலும் மற்றைய பள்ளிக்கூடங்களில் உள்ள தேர்வும், இன்னும் சில அதிகப் பாடங்களில் பயிற்சியும் நமது பள்ளிக்கூடங்களில் உள்ள பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஸமீபத்தில் எட்டு வயதுக்குட்பட்ட பெண்களைக்கூட நமது பள்ளிக்கூடங்களில் சேர்க்கும்படி ஸ்ரீமதழகியசிங்கர் நியமித்தாயிருக்கிறது.

ஆயினும் நமது பள்ளிக்கூடங்களில் சிலவிடங்களில் வித்யார்த்திகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இதற்கு முக்ய காரணம் பெற்றோர்களின் ஆதரவுக் குறைவு.

நமது பள்ளிக்கூடங்கள் அரசாங்க அங்கீகாரம் பெறாதவைகள் என்றுகூட சிலர் சங்கிப்பதாகத் தெரிகிறது, தத்கால பாடதிட்டங்கள் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பட்டவை. இப்பள்ளிக்கூடங்கள் ஸம்ஸ்க்ருத ப்ரவசனத்திற்கு மட்டிலில்லை; இதர பொதுப்பாடங்களுக்கும் சேர்த்துத்தான். இத்திட்டத்தின்படி ஆறுவது வர்ஷமுடிவில் ஓரரசாங்க பரீக்ஷை நடைபெறும். அது பொதுப் பள்ளிக்கூடங்களில் உள்ள எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையுடன் சேர்ந்ததாகிறது. அதாவது ஆங்கிலம்போன்ற சில கேள்வித்தாள்கள் இரண்டு பரீக்ஷைகளுக்குப் பொதுவானவைகளே. இந்தப் பரீக்ஷையில் தேர்வு பெற்றவர்கள் கலாசாலைகளில் சேரவும், அரசாங்க உத்யோக பரீக்ஷைக்கு ஆஜராகவும் அநுமதி அளித்திருக்கிறார்கள். தவிர தத்கால நியமங்களின்படி நாமே நமது பள்ளிக்கூட பையன்களை இம்மாதிரி பரீக்ஷைக்கு அனுப்பக்கூடும். இன்னும் ஸாமாந்ய எஸ். எஸ். எல். ஸி., மெட்ரிகுலேஷன் போன்ற பரீக்ஷைகளுக்கும் நேரிடையாகவே அனுப்பவும் முயற்சித்து வருகிறோம்.

இதனால் பெற்றோர்கள் சம்சயிக்க இடம் இல்லை. பெருவாரியாகப் பிள்ளைகளை நமது பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினால் நமது பள்ளிக்கூடங்களை நாம் பலவிதங்களிலும் வ்ருத்தி செய்ய உத்ஸாஹம் இருக்கும். இதை நமது ஸமூஹத்தில் எல்லோரும் அவசியம் கவனிக்கவேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இங்கு விராதன் யார்— அவன் செய்த தவறு என்ன? எதற்காக ஸ்ரீராமபத்ரன் அவனைக் கொன்றான்? அவனைக் கொன்றதால் எப்படி முனிவர்களின் மனோரதபூர்த்தி உண்டாயிற்று? என்பதை யறிவதற்காக ஸ்ரீராமாயணகதையை ஸங்கிரஹமாக பராமர்சிப்போம். தும்புரு என்னும் கந்தர்வன் குபேரனுக்கு வேலைக்காரனாக இருந்தான். அவன் ரம்பை என்னும் தேவஸ்த்ரீயிடம் தொடர்பு கொண்டு உரியகாலத்தில் யஜமானனான குபேரனுக்குச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாதிருந்து விட்டான். இதனால் குபேரன் கோபம் கொண்டு 'நீ ராக்ஷஸப்பிறவி யெடுப்பாய்' என்று சாபமிட்டான். தும்புருவும் மனம் வருந்திக் குபேரன் காலில் விழுந்து தன் குற்றத்தை மன்னித்துச் சாபத்தின் விமோசனத்தை யளிக்கும்படி மிகவும் கெஞ்சினான். அப்போது குபேரனும் தும்புருவினிடம் மனமிரங்கி சாபவிமோசனத்தைக் கீழ்வருமாறு கூறினான்— 'சக்ரவர்த்தித் திருமகனாயவதரித்த ஸ்ரீராமபத்ரன் எப்போது போரிட்டு உன்னைக்கொல்வானோ அப்போதே நீ சாபம் நீங்கி தும்புரு ரூபம் தாங்கி ஸ்வர்க்கம் வருவாய்' என்று. இவ்விஷயத்தை விராதனே கடைசியில் ஸ்ரீராமபத்ரனிடம் கூறியிருப்பதை ஸ்ரீராமாயணத்தில் காணலாம். இனி சாபத்தினால் விராதரூபியான இவன் செய்த தவறு என்ன என்பதைப் பராமர்சிப்போம். விராதன் தண்டகாரண்யத்தைத் தன்னிருப்பிடமாக்கிக் கொண்டான். அங்கு வஸிக்கும் ஸாதுக்களான முனிவர்களைச் சூலத்தினால் கொன்று அவர்களின் மாம்ஸத்தைத் தினந்தோறும் புசித்து வந்தான். ஸ்ரீராமபத்ரனைக் கண்ட முனிவர்கள் தேவரீரே எங்களுக்கு ரக்ஷகர். ஆகையால் எங்கள் கஷ்டங்களை நிவர்த்திக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்திருந்தார்கள். மைதிலியோடும் லக்ஷ்மணனோடும் தண்டகாவனத்தின் நடுவில் ஸ்ரீராமபத்ரன் வருவதைக் கண்டதும் கோபமடைந்த விராதன் பயங்கரமாய் இரைச்சலிட்டு ஓடிவந்து ஸீதையை இடுப்பிலெடுத்துக்கொண்டான். மேலும் முனிவேடம் பூண்டு வில்லும் அம்பும் கையிலேந்தி தண்டகாவனம் வந்திருக்கும் நீங்கள் யார்? முனிவர்களான உங்களுக்கு ஒரு பெண்ணுடன் சேர்க்கை தகாது. ஆகையாலிவள் எனக்கு மனைவியாகப் போகிறாள். இனி உங்களோடு போரிட்டு உங்கள் குருதியைக் குடிப்பேன் என்று கர்வத்துடன் மொழிந்தான். இதைக் கேட்டதும் பெருங்காற்றிலகப்பட்ட வாழைமரம் போல ஸீதை மிகவும் நடுங்கினாள். இவற்றால் கடுஞ்சினங்கொண்ட ஸ்ரீராமபத்ரன் விராதனுடன் கடும் போர் புரிந்தான். ராமபாணங்களால் அடிக்கப்பட்ட விராதனும் ஸீதையைக் கீழே யிறக்கிவிட்டு சூலாயுதத்தை ராமபத்ரன்மேல் எறிந்தான். ஸ்ரீராமபத்ரனும் இரு பாணங்களால் அச்சூலாயுதத்தைப்பிளந்து விட்டான். உடனே விராதன் தன்னிரு கைகளாலும் ஸ்ரீராமபத்ரனையும் லக்ஷ்மணனையும் எடுத்துக்கொண்டு பயங்கரமான இரைச்சலோடு காட்டுக்குள் செல்ல ஆரம்பித்தான். இதைக் கண்ட ஸ்ரீராமபத்ரன் லக்ஷ்மணா நாம் செல்லவேண்டிய வழியிலேயே இவ்வரக்கன் செல்லுவதால் நம்மை இவன் எடுத்துக்கொண்டு செல்லட்டும் என்று கூறிவிட்டான். ஆனாலும் தனியே விடப்பட்ட மைதிலியின் உரத்த கூக்குரலைக் கேட்டதும் ஸ்ரீராமபத்ரனும் லக்ஷ்மணனும் சீக்கிரமாக விராதனைக் கொல்ல ஆரம்பித்தனர். லக்ஷ்மணன் விராதனுடைய இடது கையை வெட்டிவிட்டான். ராமபத்ரனும் வலது கையைத் துணித்தான். வஜ்ராயுதத்தினால் இறக்கையிழந்த மலைபோல இருகைகளும் துண்டிக்கப்பட்ட விராதன் உடனே பூமியில்

விழுந்தான். இவ்வாறு விராதனை ஸ்ரீராமபத்ரன் ஸம்ஹரித்தான். தண்டகாவனத்திலுள்ள முனிவர்களுக்குக் கெடுதி செய்தபடியாலும் ஸீதையை பலாத்காரமாகத் தூக்கிச் சென்றதாலும் விராதன் கொடிய அபராதம் செய்தான் என்பதை யறியவும். இங்கு 'ஹதோஸ்மி புருஷவ்யாக்ர' என்று விராதன் ஸ்ரீராமபத்ரனைப் பார்த்து ('மனிதப் புலியே உன்னால் நான் கொல்லப்பட்டேன் என்று பொருள்) கூறியிருப்பதைக் கருதி நம் ஸ்வாமி ஸ்ரீராமபத்ரனை 'சார்தூல' என்று ஸாதித்தருளினர்.

विलुलितबहुफलमखकलमरजनिचरमृगमृगयारंभसंभृतचीरभृदनुरोध!

விலுலித பஹுபல மககலம ரஜநிசர ம்ருகம்ருகயாரம்ப ஸம்ப்ருத சீரப்ருதநுரோத!

(ப-ரை) விலுலித- அழிக்கப்பட்ட, பஹு- அநேகவிதமான, பல- ஸ்வர்க்கம் முதலிய பலன்களை உடைய, தானியங்களை உடைய, மக- யாகங்களாகிற, கலம- பயிர்களையுடைய ரஜநிசர- ராக்ஷஸர்களாகிற, ம்ருக- மான்களின், ம்ருகயாரம்ப- வேட்டையின் துவக்கத்தினால், ஸம்ப்ருத -ஸம்பாதிக்கப்பட்ட, சீரப்ருத்- முனிவர்களின், அநுரோத- அநுஸரணத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) தண்டகாவநவாஸிகளான மஹர்ஷிகள் ஸ்வர்க்கம் முதலிய பலவிதப் பலன்களைத் தரும் யாகங்களை நடத்துகின்றனர். ஆனால் நல்ல பயனையளிக்கும் பயிர்களை மிருகங்கள் அழிப்பதுபோல இந்த யாகங்களை ராக்ஷஸர்கள் நாசஞ் செய்கின்றனர். இதனால் வருத்தமடைந்த முனிவர்கள் ஸ்ரீராமபத்ரனையணுகி தேவரீருடைய க்ருபையால்தான் எங்கள் யாகங்கள் இடையூறின்றி முடியவேண்டும் என வேண்டுகின்றனர். துஷ்ட மிருகங்களை வேட்டையாடிக் கொல்லுவது போல ஸ்ரீராமபத்ரனும் முனிவர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க அவ்வரக்கர்களையழிக்க முற்படுகிறான் என்று. இங்கு அறியவேண்டிய கதைச் சுருக்கம் வருமாறு:— விராதஸம்ஹாரம் முடிந்தவுடன் ஸ்ரீராமபத்ரன் அவன் உடலை இலக்ஷ்மணன் வெட்டிய பெரும் பள்ளத்தில் புதைத்துவிட்டு சரபங்கர் என்ற முனிவரின் ஆச்ரமம் சென்று பக்தியுடன் அவரை வணங்குகிறான். அவரும் ஸ்ரீராமபத்ரனைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டவராய் ராம! நான் செய்த கடுந்தவத்தினால் ஸந்தோஷமடைந்த தேவேந்திரன் என்னை ப்ரஹ்மலோகம் வரும்படி தேவர்களோடு வந்து இதோ அழைக்கிறான். ஆனாலும் என் மனதுக்கு உகந்த அதிதியான உன்னைத் தர்சிக்காமல் நான் ப்ரஹ்மலோகம் செல்லமாட்டேன். இன்று உன்னை தர்சித்தபடியால் இனி நான் ஸ்வர்கக்கம் செல்வேன் என்று கூறி ஸ்ரீராமபத்ரனுக்கு விசேஷமாக ஸத்காரம் செய்கிறார். மேலும் ஸர்வகர்மாக்களினாலும் ஆராதிக்கவேண்டிய ஸ்ரீராமபத்ரனுக்கு எதிரில் அக்நியை வளர்த்து மந்திரத்துடன் நெய்ஹோமம் செய்து அந்த அக்நியில் தன் உடலையே ஹோமப்பொருளாகப் பாவித்து அர்ப்பணம் செய்துவிட்டார். உடனே திவ்யதேஜஸ் பொருந்திய குமாரவடிவத்துடன் அந்த அக்நிகுண்டத்தினின்றும் வெளிக்கிளம்பி ப்ரஹ்மலோகம் சென்றுவிட்டார். இப்படி சரபங்கர் ப்ரஹ்மலோகம் சென்றபிறகு தண்டகாவனத்தில் தவம் புரியும் முனிவர்கள் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீராமபத்ரனிடம் வந்தனர். தர்மத்தை உள்ளபடி உணர்ந்து ரக்ஷிக்

கின்ற ஸ்ரீராமபத்ரனை நோக்கி கீழ்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டனர்:— ராம! தங்கள் வரவு நல்வரவாகுக. பம்பாநதி, மந்தாகினி, சித்ரகூடமலை முதலிய ப்ரதேசங்களில் வாழும் எம்போன்ற அநேக முனிவர்களுக்கு ராக்ஷஸர்களிழைக்கும் தீங்குகளைத் தாங்கள் நேரில் வந்து பார்க்கவேண்டும். பகவானை ஸர்வதா த்யானித்துக் கொண்டிருக்கும் முனிவர்களின் தேஹங்களில் அவர்கள் ரொம்பவும் தீமையிழைத்திருப்பதைக் காணவேண்டும். இப்படி இவ்வரக்கர்கள் செய்யும் கொடுமைகளை ஸஹிக்கமாட்டாத நாங்கள் ஸர்வஜகத்ரக்ஷகனாகிய தங்களிடம் சரணாகதி செய்கிறோம். அணு அணுவாக ராக்ஷஸர்களால் ஹிம்ஸிக்கப்படுமெங்கள் யாவரையும் தாங்கள் ரக்ஷிக்கவேண்டும். வீர! உன்னைத் தவிர வேறு கதி எங்களுக்கு இவ்வுலகில் கிடையாது. சக்ரவர்த்தி குமார! எங்களுக்கு ராக்ஷஸ உபத்ரவம் இல்லாதபடி செய்யவேண்டியது தேவரீர் பொறுப்பு என்று. இப்படி மஹர்ஷிகள் கூட்டமாகச் செய்து கொண்ட விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ ராமபத்ரன் ஸுதீக்ஷ்ணர் என்ற முனிவரினாச்ரமம் சென்று அம்முனிவரை வணங்குகிறான். அவரும் ஸந்தோஷத்துடன் ஸ்ரீராமபத்ரனை ஆசிர்வதித்து ‘கீர்த்தி பொருந்திய ராம! அழகிய இவ்வாச்ரமம் உன்னுடைய வாஸத்துக்குத் தகுந்தது. முனிவர்களுக்கு வேண்டிய கிழங்குகளும் பழங்களும் இங்கு எப்போதும் கிடைக்கின்றன. ஆகையால் நீர் இவ்வாச்ரமத்தில் வஸிக்கவேண்டும். மேலும் இங்கு பல துஷ்டமிருகங்கள் பயமில்லாமல் ஸஞ்சரித்துக்கொண்டு முனிவர்களுக்கு ஏமாற்றத்தையளிக்கின்றன. இங்கு இம்மிருகங்களைத் தவிர வேறு உபத்ரவமில்லை, என்று ராக்ஷஸர்களைத் துஷ்டமிருகங்களாகக் குறிப்பிட்டு இவ்வரக்கர்களை இங்கிருந்தபடியே ஒழிக்க வேண்டுமென ஸூசிக்கின்றார். இந்த அபிப்ராயத்தையறிந்த கோஸலேந்த்ர குமாரன் ‘அம்மிருகங்களை நான் என் கூறிய பாணத்தினால் கொன்றுவிடுகிறேன். ஆனால் இங்கிருந்தபடியே கொல்லும்போது தங்களிடம் அபசாரம் செய்ய நேரிடுமாகையால் நான் வெகுகாலம் இவ்வாச்ரமத்தில் வஸிக்க விரும்பவில்லை என்று கூறி ராக்ஷஸர்களை ஸம்ஹரிக்கத் தீர்மானம் செய்து கொள்கிறான். இந்த ஸ்ரீமத்ராமாயணத்தில் ராக்ஷஸர்களை மிருகங்களாகக் கூறியிருப்பதை யநுஸரித்து நம் ஸ்வாமியும் அதற்குத் தக்கபடி தருமங்களைப் பயிராகவும் முனிவர்களைப் பயிரிடுவோராகவும் ராக்ஷஸர்களை அதையழிக்கவரும் மிருகங்களாகவும் ஸ்ரீராமபத்ரனை அம்மிருகங்களை அழித்து பயிரைக் காக்கும் காவலனாகவும் உருவகப்படுத்தியிருக்கிறார்.

त्रिशिरश्शिरस्त्रितयतिमिरनिरासवासरकर!

த்ரிசிரஸ்சிரஸ்த்ரிதயதிமிர நிராஸவாஸரகர!

(ப—ரை) த்ரிசிரஸ்— த்ரிசிரஸ் என்னும் ராக்ஷஸனுடைய, சிரஸ்த்ரிதய— மூன்று தலைகளாகிற, திமிர— இருளை, நிராஸ— அழிப்பதில், வாஸரகர— ஸூர்யனாகவிருக்கும் ஸ்ரீராமபத்ர!

(கரு) தண்டகாரண்யவாஸிகளான ரிஷிகளுக்குத் தீங்கு செய்த த்ரிசிரஸ் என்னும் ராக்ஷஸன் ஸ்ரீராமபத்ரனுடன் போர் செய்யலானான். ஸ்ரீராமபத்ரனும் பாணங்களை ப்ரயோகித்து அவ்விராக்கதனுடைய மூன்று தலைகளையும் துணித்து முடிவில் அவனை அதம் செய்தார். காரியங்களைச் செய்வதில் இருட்டு தடையாயிருப்பது போல த்ரிசிரஸ் என்ப

வன் ரிஷிகளின் நல்ல காரியங்களைத் தடுத்து வந்தான். ஆகையால் சூரியன் இருளை அழிப்பதுபோல் ஸ்ரீராமபத்ரனும் இவ்விராக்கதனைக் கொன்றார் என்பது ரூபகத்தினால் பெறப்பட்டது. இது முதலாக நாலு சூர்ணிகைகளால் ஸ்ரீராமபத்ரன் செய்தருளிய கரதூஷணாதி வதத்தை ஸாதிக்கத் திருவுள்ளம் பற்றிய நம் தூப்புல் குலமணி இந்த சூர்ணிகையினால் த்ரிசிரஸ் என்ற ராக்ஷஸனைக் கொன்ற வரலாற்றைக் கூறியருளினார். இங்கு அறியவேண்டிய ஸ்ரீராமாயணகதை வருமாறு:— தண்டகாரண்யவாஸிகள் சரணாகதி செய்தபோது அவர்களுக்குத் தீங்கிழைத்த ராக்ஷஸர்களை ஒழிப்பதாக ஸ்ரீராமபத்ரன் செய்த ப்ரதிஜ்ஞையைக் கேட்டதும் ஜகன்மாதாவான ஸீதாதேவி நமக்கு எவ்விதத்திலும் நேரிடையாகத் தீங்கிழைக்காதவர்களை நாம் வதம் செய்வது அநுசிதமாகையால் தேவரீர் இம்முனிவர்களிடம் இவ்வாறு ப்ரதிஜ்ஞை செய்யலாமா என்று ஸ்ரீராமபத்ரனிடம் தன் ஸந்தேஹத்தை விஜ்ஞாபித்துக் கொண்டாள். ஜகத்பிதாவான பரமபுருஷன் மஹர்ஷிகளை எனக்கு ப்ரியமான குழந்தைகள். என் குழந்தைகளாகிய அவர்களை ஹிம்ஸிப்பவர்கள் என்னால் வதம் செய்யத் தகுந்தவர்களே. மேலும் இம்மஹர்ஷிகள் என்னைச் சரணமடைந்தவர்கள், சரணாகதி செய்தவர்களைக் காப்பதும் என் கடமையாகும். தேவி! ஸத்யப்ரியனாகிய நான் என்னுயிர் போன்ற உன்னையோ லக்ஷ்மணனையோ விட நேர்ந்தாலும் விட்டிடுவேன். ஆனால் மஹான்களிடம் செய்த ப்ரதிஜ்ஞையை எக்காலத்திலும் நிறைவேற்றியே தீர்வேன், என்றிவ்வாறு பல சொல்லித் தான் செய்த ப்ரதிஜ்ஞை சரியானதே என்று தெளிய உரைத்தான். பிறகு ஸ்ரீராமபத்ரன் ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் பலகாலம் தண்டகாவனத்தில் வாஸம் செய்து முடிவில் அகஸ்த்யமுனிவரின் ஆச்ரமம் சென்றான். அங்கு அம்முனிவரின் அநுக்ரஹவிசேஷத்தைப் பெற்று அவர் கட்டளைப்படி பஞ்சவடி என்றவிடத்தில் தங்கியிருந்தார். அப்போது சூர்பணகை என்ற ராக்ஷஸி அவ்விடம் வந்து சேர்ந்தாள். ஸ்ரீராமபத்ரனின் ஸௌந்தர்யவிசேஷத்தைக் கண்டதும் அவனிடம் அடங்காக் காதல் கொண்டாள். முடிவில் அக்காதல் பலிக்காததை யறிந்து சினங்கொண்ட அவ்வரக்கி மைதிலியைத் துன்புறுத்த வந்தாள். இதைக் கண்ணுற்ற ஸ்ரீராமபத்ரனின் கட்டளையினால் இலக்ஷ்மணன் சூர்ப்பணகைக்கு அங்கவிகாரம் செய்து விரட்டினார். உடனே சூர்ப்பணகை ஜனஸ்தானம் சென்று கரன் என்ற ராக்ஷஸத் தலைவனிடம் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தெரிவித்து ஸ்ரீராமபத்ரனோடு போர் தொடுக்கவேண்டுமென்று சொன்னாள். கரனும் த்ரிசிரஸ் என்ற ராக்ஷஸனைப் பல வீரர்களுடன் அனுப்பி வைத்தான் என்று.

दूषणजलनिधिशोषणतोषित ऋषिगणघोषितविजयघोषण!

தூஷணஜலநிதிசோஷணதோஷித ரிஷிகணகோஷித விஜயகோஷண!

(ப—ரை) தூஷண— தூஷணன் என்ற ராக்ஷஸத் தலைவனாகிற, ஜலநிதி— கடலை, சோஷண— வற்றச் செய்ததால், தோஷித— ஸந்தோஷமடைந்த, ரிஷிகண— மஹரிஷிக் கூட்டத்தினால், கோஷித— உரத்த குரலால் வெளியிடப்பட்ட, விஜயகோஷண— விஜயவ்ருத்தாந்தத்தைக் குறிக்கும் கோஷத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(தொடரும்)

ஸ்ரீ:

தேச உலக ரக்ஷை

210728.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வாழ்வதற்கேற்ற உபாயமான யஜ்ஞங்களைக் கூறுவதினாலேயே வேதங்கள் நம்மவர்களால் மிகவும் போற்றப்படுகின்றன. ரிக், யஜுஸ், ஸாமம் என்கிற இவ்வேதங்கள் மூன்றும் முழுவதும் யஜ்ஞங்களையே கூறுகின்றன. யஜ்ஞங்களைச் செய்ய வியலாத போதும் இவ்வேதங்களை ஓதுவதாலேயே யஜ்ஞங்களைச் செய்தால் உண்டாகும் பலன்களைப் பெறலாமென்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் வேதாத்யயனமும் மிக ப்ரதானமானது.

11. முறைப்படி செய்யப்பெற்ற உபநயனமும் விவாஹமும் தகுதியைத் தரும்

உபநயனம் செய்யப் பெற்று பல நியமங்களோடு வேதாத்யயனம் செய்ய வேண்டுமென்றும் இது முடிந்த பிறகு சாஸ்திர விதிப்படி விவாஹம் செய்து கொண்டு க்ருஹஸ்தனாகி யஜ்ஞங்களையனுஷ்டிக்க வேண்டுமென்றும் முன்பே கூறப்பட்டது. சாஸ்திரம் விதித்த முறையில் இந்த உபநயனமும் விவாஹமும் செய்யப்படாவிட்டால் அவர்களால் செய்யப்படும் வேதாத்யயனமும் யஜ்ஞங்களும் நிஷ்பலமாகும். பலனைக் கொடுக்கக்கூடிய யோக்யதை அவற்றுக்கு உண்டாகாது. இருக்கும் யோக்யதையையும் அவை இழந்து விடும்.

12. ஆசாரமும் அப்படியே

மனோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களுக்கும் சுத்தியையுண்டாக்குகின்ற பல நியமங்கள் இருக்கின்றன. படுக்கையை விட்டு எழுதல், சரீர சுத்தி, தந்தசுத்தி, ஸ்நானம், ஸந்த்யாவந்தனம், ஔபாஸனம், பெரியோர் வணக்கம், பகவத் ஸேவை, போஜனம், படுத்துத் தூங்குவது, எண்ணெய் தேய்த்துக் கொள்வது, க்ஷௌரம் என்ற இவை எல்லாவற்றையும் பற்றிப் பல நியமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தவறாது அனுஷ்டிப்பதே ஆசாரமெனப்படுகின்றது. இந்த ஆசாரத்தைப் பரிபாலித்து மனோவாக்காயங்களை பரிசுத்தமாக வைத்துக் கொண்டவர்கள் செய்யும் வேதாத்யயனம் முதலியவையே பலனைத் தரும். மற்றவர் செய்வதெல்லாம் நிஷ்பலம்.

13. ஸர்வஜன வித்யை

நாட்டிலுள்ள ஸர்வஜனங்களும் அறிவையும் விவேகத்தையும் பெறவேண்டும். அப்படியல்லாமல் அவர்கள் மூடர்களாயிருந்தால் ஸத்யம், அஹிம்ஸை, திருடாமை என்கிற ஸர்வஜன ஸாதாரணமான இந்த ஸாமாந்யதர்மமே நாட்டில் நிலைபெறாமல் எங்கும் அக்ரமங்களும் தீச்செயல்களும் மலிந்து சாந்தியே யிராமல் யாவரும் அவதிப்படுவார்கள். அதற்காக இதிஹாஸ புராணங்கள் நமது நாட்டில் தோன்றின. அங்கங்கு உள்ள கற்றோர்கள் இவற்றை உபந்யஸித்து ஜனங்களுக்கு 'இது நல்லது' 'இது கெட்டது' 'இதைச் செய்யலாம்' 'இதைச் செய்யக் கூடாது' என்கிற விவேகத்தையுண்டாக்கினார்கள். 'ஈச்வரன் ஒருவன் இருக்கின்றான். அவனது அருளால்தான் நாம் எவ்வித க்ஷேமத்தையும் பெற வேண்டும்' என்று பொதுவாக தத்வ ஜ்ஞானத்தை உண்டாக்கினார்கள். 'நல்ல கார்யம் செய்தால் பிறகு ஸுகம் கிடைக்கும். கெட்ட கார்யம் செய்தால் பெரும் துன்பம் அனுபவிக்க வேண்டும்' என்ற நம்பிக்கையாகிற ஆஸ்திக்யத்தை உண்டாக்கினார்கள். அதன் மூலமாக அதர்மத்தை விடுவதிலும் தர்மத்தை அனுஷ்டிப்பதிலும் மிகுந்த ச்ரத்தையையும் உறுதியையும் உண்டாக்கினார்கள். இப்படியெல்லாம் செய்து ஸர்வஜனங்களும் அமைதியுடனும் பரஸ்பரஸ்நேகபாவத்துடனும் மர்யாதையுடனும் வாழும்படி செய்து வந்தார்கள். இதுவே ஸர்வஜனவித்யை. நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் இதைப் பூர்ணமாகப் பெற ஏற்பாடு

சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது. அதனால் ஜாதி, மதம், ஆசாரம், தொழில், வஸிக்கும் ப்ரதேசம், பாஷை என்ற இவற்றாலும் மற்றும் பல காரணங்களாலும் உண்டான பல பல பேதங்கள் இருந்தாலும் இவற்றில் எதுவும் த்வேஷத்திற்கும் கலஹத்திற்கும் காரணமாகாமல் பரஸ்பரம் ப்ரீதியும் ஒற்றுமையும் இருந்து வந்தன.

14. மதம்

இப்படிச் சிறந்த முறையில் செய்யப்பெற்ற ஸர்வஜனவித்யா ப்ரசாரத்தின் மூலமாகவே துர்பிக்ஷம், வெள்ளச் சேதம், பெருங்காற்று, தீவிபத்து, வியாதி என்ற இவைபோன்ற ஆபத்து ஒன்றும் உண்டாகாமலும் காலத்தில் வேண்டிய அளவு மழை பெய்து பூமி நன்றாக பலித்துப் போதிய அன்னவஸ்திரங்களைப் பெற்றும் உலகத்திலுள்ள ஸர்வஜனங்களும் வாழவேண்டும். இதற்கு மூலகாரணம் தைவானுக்ரஹம். இதைப் பெறும் வழி வேதாத்யயனமும், யஜ்ஞானுஷ்டானமும் சாஸ்திரங்கள் கூறிய யோக்யதையைப் பெற்று அனுஷ்டித்தபொழுதே இவை தேவர்களுக்குப் ப்ரீதியை உண்டாக்கும். இந்த யோக்யதைப் பிறப்பினாலும் அதையனுஸரித்துச் செய்யப்படும் உபநயநம், விவாஹம் முதலிய ஸம்ஸ்காரங்களினாலும் ஸ்நானம் முதலிய ஆசாரங்களினாலும் உண்டாகின்றது’ என்கிற இந்த விவேகத்தைப் பூர்ணமாகப் பெற்று எல்லோரும் அவ்விஷயங்களையெல்லாம் அப்படியே நம்பினார்கள். இந்த நம்பிக்கையே தத்காலம் ஹிந்து மதம் எனப்படுகின்ற நமது ஸநாதநமதமாகும். சிவனைப் பரம்பொருளென்று கொள்வது சைவமதம், விஷ்ணுவை அப்படிக் கொள்வது வைஷ்ணவமதம். ‘நிர்குண ப்ரஹ்மம் ஒன்றே உண்மைப் பொருள். மற்றதெல்லாம் பொய்’ என்று கொள்வது அத்வைதம். ப்ரஹ்மம்போலவே அதைக்காட்டிலும் வேறான ஜீவாராசியும் ஜடப்பொருளும் மெய்யாகவே இருக்கின்றன, என்று கொள்வது த்வைதம். இவை வேறுபட்டனவாயினும் பரமாத்மாவுக்கு உடலாகி அவனோடு எப்பொழுதும் எந்த நிலையிலும் ஒட்டிக்கொண்டு ஒன்றாகவே யிருக்கின்றன என்று கொள்வது விசிஷ்டாத்வைதம். இந்த மதபேதங்களும் ஸித்தாந்தபேதங்களும் நமக்குள் உட்பிரிவுகளுக்குக் காரணமாயிருக்கின்றனவேயன்றி ‘ஹிந்து (ஸநாதனி)’ என்று நமக்கு எல்லோருக்கும் பொதுவாக உள்ள இப்பெயருக்குக் காரணமாகமாட்டா. கீழ்ச் சொன்னபடி வேதங்களும் அவற்றை அனுஸரித்த மற்ற சாஸ்திர நூல்களும் ப்ரமாணமென்றும், அதாவது உண்மையையே உபதேசிக்கின்றனவென்றும், அவை கூறுகின்றபடி ஈச்வரன் ஒருவன் இருக்கின்றானென்றும், அவனது அருளைப் பெற்று நாம் ஸுகமாக வாழ்வதற்கு வழி சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை முறை தப்பாமல் செய்வது தான் என்றும், இந்தக் கர்மாக்கள் செவ்வையாய் நடைபெறுவதற்காகவே பலவித வ்யவஸ்தைகளும் ஆசாரங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நம்புவதுதான் ஹிந்து மதம்.

15. க்ருஷி (வ்யவஸாயம்) டோல் வேதமோதல் முதலியனவும் ப்ரதானம்

நிலங்களை உழுது பயிரிடுவது எவ்வளவு ப்ரதானமோ அவ்வளவு ப்ரதானம் வேதாத்யயனம் முதலியவற்றைச்செய்வதும். அன்னமில்லாமல் மனிதர் ஜீவிக்கமுடியாது. மழையின்றி நிலங்களை உழுது பயிரிட்டு தான்யங்களைப் பெறமுடியாது. மழை முன்கூறியபடி வேதாத்யயனயஜ்ஞாதிகளாலுண்டாகின்றது. அவையின்றி மழை பெய்யாது. பெய்தாலும் மிக ஸ்வல்பமாகப் பெய்யும். அல்லது பெருமழை பெய்து பெருஞ்சேதத்தை விளைவிக்கும். சிலவிடங்களில் இடப்பட்டு வளரும் பயிர்களையும் பூச்சிகளுண்டாகி அழிக்கும். ஆகையால் பயிரிடுந்தொழிலைச் சிலரே மேற்கொண்டாலும் நாடு முழுவதிற்கும் பயன்படுகின்றபடியால் அது நாட்டிலுள்ள யாவரும் தமக்காகச் செய்யப்படுகின்றதென அபிமானித்துக் கொண்டாடும்படி அவ்வளவு முக்யத்வம் உள்ளதாக எப்படி இருக்கின்றதோ அப்படியே வேதாத்யயன யஜ்ஞாதிகளும், நாடு முழுவதும், ஏன் உலகம் முழுவதும் க்ஷேமமாயிருப்பதற்காகவே இவர்களாசா

ரங்களோடும் நியமங்களோடும் வேதாத்யயனம், சாஸ்த்ராப்பாஸம், தேவபித்ருகார்யங்களிவை எல்லாவற்றையும் செய்துவருகின்றனர் என்ற எண்ணம் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் முன் இருந்தது. ஒவ்வொரு ஜாதியிலும் அதனுட்பிரிவுகளிலும் வம்சபரம்பரையாக நடந்துவரும் ஒவ்வொரு தொழிலைப்பற்றியுமிதே எண்ணத்தை அறிவாளிகளெல்லோருங் கொண்டனர். அவ்விதத்தொழில்களுக்குள் வேதாத்யயனமும், யஜ்ஞங்களும்நேராகதேவர்களுடைய அனுக்ரஹத்திற்கும்மழைக்கும்தீங்கு ஒன்றும் நேரிடாமலிருப்பதற்கும் முக்யகாரணமாகக்கருதப்பட்டபடியால் அவற்றைச் செய்துவருமவர்களிடத்தில் மற்றெல்லோருக்கும் மிகுந்த மர்யாதையும் கௌரவமும் இருந்து வந்தன. அவர்களுக்குள்ளும் வயதினாலும் படிப்பினாலும் அனுஷ்டானத்தினாலும் சிறந்து விளங்கியவர்களிடத்தில் மற்றோர்க்கு அவ்விதமே பக்தி விச்வாஸங்கள் மிகுந்திருந்தன. ஆத்மஜ்ஞானம் ஆசாரம் அனுஷ்டானம் இவற்றால் பரிசுத்த மனஸ்ஸுள்ளவர்களாயும் தயை, தாக்ஷிண்யம் முதலிய உத்தம குணங்கள் நிறையப் பெற்றவர்களாயும்மிகவும் சாந்தர்களாயுமிருந்தபெரியோர்களுடைய ஆத்மசக்தி விசேஷத்தாலும் ராக்காலங்களிலும் மற்றும் ஸமயம் வாய்த்தபோதும் அத்தகையோர்கள் இதிஹாஸ புராணங்களின் மூலமாகச் செய்த உபதேசங்களாலும் எல்லோரும் கீழ்ச்சொன்னபடி விவேகத்தைப் பெற்று அமைதியோடும், ஸந்தோஷத்தோடும் அந்யோந்யம் ஸ்நேஹத்தோடும் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வித அமைதி குலையாமலும் அவரவர்களுடைய தொழிலை அவரவர்கள் செய்வதற்குத் தடை ஒன்றுமுண்டாகாமலும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் கடமையென்பதும் யாவராலுமுணரப்பட்டிருந்தது. ஆகவே அரசர்கள் குடிகள், ப்ராஹ்மணர்கள் அப்ராஹ்மணர்கள், ஸ்த்ரீகள், புருஷர்கள், தென்னாட்டார், வடநாட்டார், தமிழர், தெலுங்கர் என்றிப்படி எத்தனை பேதங்களிருந்தாலும் எல்லோருக்கும் ஒற்றுமை பூர்ணமாக இருந்தது.

இவ்வித தர்மநிலை செவ்வையாகப் பரிபாலிக்கப்பட்டபோது காலத்தில் மழை பெய்து தீங்கொன்றுமில்லாமல் ஜனங்கள் ஸுகமாக வாழ்கின்றார்கள். அப்படிப் பரிபாலிக்கப்படாமல் போனபோது துர்பிக்ஷத்தினாலும் மற்ற விபத்துக்களாலும் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள், என்கிற இவ்வுண்மையை அநாதிகாலமாக ப்ரத்யக்ஷமாகக் கண்டுவந்தார்களாகையால் நமது நாட்டு ஜனங்கள் யாவரும் அதிக மதப் பற்று உள்ளவர்களாக இருந்தார்கள்.

16. நமது மதத்தின் சிறப்பு

இப்படி இவ்வுலகில் எல்லோரும் ஸுகமாக வாழ்வதே முக்ய உத்தேச்யமாக இருப்பது நம்முடைய மதத்திற்கு மற்ற எதற்குமிராத ஒரு தனிச் சிறப்பு மரித்த பிறகு நரகத்திற்குப் போகாமலிருப்பதற்காகவும் ஸ்வர்க்கத்திற்குப் போய் ஸுகங்களை அனுபவிப்பதற்காகவும்ஏற்பட்டது மதம். ஆகையால் அவரவர்களுடைய விருப்பப்படி மதப்பற்று இருந்தாலும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம். இது ஒவ்வொரு மனிதனுக்கும் ப்ரத்யேகம்சொந்தமான தனி விஷயம்என்ற இந்நிலைநமது ஸநாதனமதம் ஸம்பந்தப்பட்டவரையிலில்லை. சைவனாயிருப்பதா வைஷ்ணவனாயிருப்பதா? மோக்ஷத்தைப் பெற முயற்சிசெய்யலாமா வேண்டாமா? அதற்குபாயமாக விதிக்கப்பட்ட கர்மயோகம் முதலியதைச் செய்வதா வேண்டாமா? ஸந்யாஸம்பண்ணிக்கொள்வதா வேண்டாமா? என்ற இவைபோன்ற விஷயங்களவரவர்களையே சேர்ந்தசொந்த விஷயங்களாயிருக்கலாம். ஆனாலுபநயநம் செய்து கொள்வதா வேண்டாமா? ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்வதா வேண்டாமா? க்ருஹஸ்தனானபிறகு யஜ்ஞங்களைச்செய்வதா வேண்டாமா? என்ற கேள்விகளுக்கோ ஆலோசனைகளுக்கோ இடங்கிடையாது. மழைவேண்டுமா வேண்டாமா? நிலங்களை உழுது பயிர் செய்ய வேண்டுமா வேண்டாமா? என்ற கேள்விகளுக்கோ ஆலோசனைகளுக்கோ எப்படி இடமில்லையோ அப்படியே அவற்றுக்கும். உலக நன்மைக்காக ஏற்பட்ட விஷயங்களாகையால் இவையெல்லாம் எவ்வித இடையூறுமின்றி சரிவர நடைபெறும் விஷயத்தில் நாட்

லுள்ள யாவருக்கும் பொறுப்பு உளது. கஷ்டமாயிருக்கிறதென்று தமக்குரிய இத்தொழில்களை எவரும் விடக்கூடாது. அவரவர்கள் அவரவர்களுக்குரிய தொழிலைச் செய்யும் போது மற்றவர் அவர்களுக்கு எவ்விதத் தடையும் செய்யாமலிருப்பதுமட்டுமன்றி அவர்களைப் போற்றி உத்ஸாகப்படுத்தவும் வேண்டும். கெட்ட ஸ்வபாவமுள்ளவர்கள் அறியாமையினாலும் பிறர் துன்பத்தைக் கண்டு களிக்கும் தன்மையினாலும் உலக முக்யத்வம் வாய்ந்த இந்தத் தர்மகார்யங்களுக்கும் தம்மாலியன்றவரை எல்லாவித இடையூறுகளையும் செய்ய முற்படுவார்கள். இவர்களே ராக்ஷஸரெனப்படுவர். இவர்களை உலக த்ரோஹிககளாகக் கருதி அடக்க வேண்டியதில் அரசாங்கம் வெகு கவனமாக இருக்கும்.

நமது நாட்டில் அஹிம்ஸையையே முக்யமாகக் கொண்ட பௌத்தமதம் தோன்றிற்று. தத்வங்களைப்பற்றி ‘உண்டு’ ‘இல்லை’ என்றும் ‘ஒன்று’ ‘பல’ என்றும் ‘நித்யம்’ அநித்யம்’ என்றும் இப்படிப் பலபல விவாதங்கள் உண்டாக அவற்றையெல்லாம் ஸமரஸப்படுத்த முயன்று எல்லாம் உண்மையே என்று கூறி சாந்தியை ப்ரதானமாகக் கொண்ட ஜைன மதம் தோன்றிற்று. ஆகிலும் ப்ரஜைகள் அன்னவஸ்திரங்களைப் பெற்று தைவ மாநுஷ ஆபத்து எதுவும் ஏற்படாமல் ஸுகமாக வாழ்வதற்குரிய வழியைக் காட்டிய ஸநாதன மதத்தின் பெருமையையும் உண்மையையும் நாட்டு ஜனங்கள் யாவரும் ப்ரத்யக்ஷத்தில் செவ்வையாக அறிந்திருந்தார்களாகையால் இது சிறிதும் பாதிக்கப்படாமல் ப்ரகாசித்து வந்தது.

17. ஆத்ம சக்தி

அவரவர்களுக்கு ஏற்பட்ட தொழில்களை அவரவர்கள் முறைப்படி அநுஷ்டித்து வந்தால் அதனால் உலக நன்மை உண்டாகின்றது என்பது தவிர அநுஷ்டிப்பவர்களுடைய மனஸ்ஸு காலக்ரமத்தில் ஸர்வமலமும் கழிந்து மிகப்பரிசுத்தமாய், பஞ்சபூதங்களால் ஆகி நச்வரமாயிருக்கின்ற இதை சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டு நித்யமாயிருக்கின்ற ஆத்மாவின் விஷயத்தில் ஆசையை உண்டாக்குமிந்த ஆசை மேல்மேல் வளர்ந்தால் ஜ்ஞாநயோகத்தை அநுஷ்டித்து ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறமுயல்வார்கள். அதன்மேல் பக்தியோகத்தைச் செய்து பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தைப் பெற முயல்வார்கள். இவ்விஷயம் முன்பே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது. இந்த யோகங்களை அநுஷ்டித்து ஸித்தி பெற்றவர்கள் யோகிகளென்றும் முனிவர்களென்றும் பக்தர்களென்றும் கூறப்படுவர். இவர்களுடைய ஆத்மசக்தி அபாரமாகவிருக்கும். இவர்கள் மற்றவர்கள் யாவரும் காணக்கூடிய ரீதியில் உலக நன்மைக்காக எதையும் செய்வதாகத் தோன்றாது. உபதேசம் கூடச் செய்யமாட்டார்கள். ஜனங்களோடு பழகமாட்டார்கள். தனியே இருந்து ஏதோ செய்துகொண்டிருப்பார்கள். ஒருவரையும் லக்ஷ்யம் செய்யாமல் கர்வமுள்ளவர்கள் போலும், அஹங்காரமுள்ளவர்கள் போலும் தோன்றுவார்கள். ஆகிலும் இவர்களால் உலகத்திற்கு உண்டாகும் நன்மை அபாரமானது. ஒன்றும் செய்யாமல் அவர்கள் நாட்டில் இருந்து வருவதே நாட்டிற்கு க்ஷேமத்தைத் தரும். அவர்கள் உலகத்திலுள்ள எல்லாச் சுகங்களையும் வெறுத்து அவற்றில் சிறிதும் பற்றில்லாமல் ஆனந்தமாக இருப்பதற்குக் காரணம். அவர்கள் பூர்வபுண்யங்களால் பெற்ற ஸச்சிதாநந்தமான பரம் பொருளின் உண்மையறிவே என்பதைக் காணும் ஜனங்கள் அப்பொருளில் மாறாத நம்பிக்கை கொண்டு உத்தம ஆஸ்திகர்களாயிருப்பாாகள். அவ்விதமானவர்கள் இருக்கும் நாட்டில் அவர்களுடைய ஆத்மசக்தியின் காரணமாக துர்பிக்ஷமுண்டாகாது. வ்யாதி உண்டாகாது. மனிதர்களுக்குக் கெட்ட. எண்ணங்களும் கெட்டச் செயல்களும் உண்டாகா. உயர்ந்த வித்யை நாட்டில் பிரசாரத்தில் இருக்கிறதென்பதற்கு இப்படிப்பட்ட மஹான்கள் சிலர் இருப்பதே அடையாளமாகும். இப்படிச் சிலர் தோன்றுவதற்குத் தக்க சூழ்நிலை யில்லாதவிடத்திலும் காலத்திலும் உத்தம வித்யாப்ரசாரமில்லை யென்றே கொள்ளவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

குருபரம்பரையைப் ப்ரார்த்திக்கையிலந்த அதிகாரமுடிவில் பாடிய இந்த ச்லோகமும் நினைவிற்கு வருகிறது. 'சூழ் விசும்பு' திருவாய்மொழியை ஸ்மரிக்கையில், 'காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்' என்ற பாசுரமும், குருபரம்பராதிகாரத்திலநுஸந்தாநம் செய்யும் 'காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத் தாளம் வழங்கித் தமிழ் மறையின்னிசை தந்த வள்ளல்' என்ற முநிநாதனநுஸந்தானப் பாசுரமும் நினைக்கப்படுகிறது. ஸப்யர்களில் அப்பரம்பரையாயர்களும் வீற்றுளர். ஹரதாகமதைவதர் போன்றவர்கள். இந்த நாடகாபிநயப்ரயோகத்தை நாதமுனியினுகப்பிற்கு ஸமர்ப்பணம் செய்வது, பகவத்விஷயத்தில் காமத்தை உண்டுபண்ணுவது, ஸாக்ஷாந்மன்மதமன்மதனாகிய கண்ணனுடைய காமாஸ்த்ரம். மன்மதனுக்கு, சூதம், ரஸாலம், எனும் மாவின் இளந்தளிர் அஸ்த்ரம். வால்மீகி போன்ற கோகிலங்களுக்கு அது ஸ்வாதுவாய் ருசிக்கும். மிக ஸூக்ஷ்மதர்ம சரணாகதி ஸூக்ஷ்மங்களின் விளக்க ரஸம் வேம்பு தின்னும் காக்கைகளுக்கும் முழுக்கோணலான ஒட்டகங்களுக்கும் ருசிக்காது. பகவானிடத்தில் ஆழ்வாரைப்போல் காமவெள்ளம் பெருகுவதற்கு ஆழ்வார்கள் பாசுரங்களை இன்னிசை தாளம் அபிநயம் முதலியதோடு நடித்துப் பாடும் ஸம்ப்ரதாயம் வேணும். குருபரம்பராதிகாரம் தொடக்கத்தில் படிப்பதோடு முடிவிலும் ஆசார்யக்ருத்யாதிகாரமும் சிஷ்யக்ருத்யாதிகாரமும் சேர்க்கப்பட்டது. ஹ்ருதம்— எனக்கு, கவொஜெடுநிய- மன்மதனை ஜயித்த ஸாக்ஷாந்மன்மத மன்மதனான பகவானுடைய, ஶர—குணங்களாகிய அம்புகளால், உத்நாய- என் ஹ்ருதயத்தில் தைத்து ஆழ்வாரைப் போல் பகவத்காமம், பரபக்தி, பரஜ்ஞாநம், பரமபக்தி வகைகளாகப் பெருகி என் மனது அக்காமாவேசத்தால் க்ஷோஹமடைவதற்காக, (அச்சிடப்படாத கரூர்ஸ்வாமி உரையிலுமிப்படிப் பொருளுரை.) ஸாரதீபிகையில், 'இங்கே மன்மதன்' மன்மதமன்மதனான பகவான். ஶராங்கள்—தைத்துக் கலக்கும் கல்யாண குணங்கள், என்றும், பகவத்குணருசிமுதல் பர்வம், அதிலும் உயர்ந்த பர்வம் ஆசார்யர்களிடமும், அவர்கள் ஸம்ப்ரதாயத்திலும், ஸ்ரீஸூக்திகளிலும் ருசி மதுரகவியின் வழி. அந்த உயர்ந்த பர்வத்தில் ருசி கோரப்படுகிறது, என்றும் விவரணம். நாயாநுயஃ— இதைச் செய்விக்கும் ஆழ்வார்கள் ப்ரபந்தங்களை அவரால் உபதேசிக்கப்பெற்று நமக்குத் தந்த வள்ளல் அவற்றைப்பாடியாடி மனத்திலின்புறப்பதியச்செய்யும் அபிநயகர்த்தநாதி ஸம்ப்ரதாயத்தையும் தந்த வள்ளல். இந்த நாடகத்தின் முடிவிலும் அவரை நினைத்துப் பாடுவது அவச்யம். நாயொவஜூமான தர்சனமிது. அந்த தர்சனதத்வங்களையநுபவிக்கச் செய்யும் நாடகம். நாயதர்சன நாடகம், நாயதர்சன த்ருச்ய ப்ரபந்தம்— பகவத்காமமேற்பட்டால் மற்றை நம் காமங்களெல்லாம் மாறிப்போம். அப்படி மாறச் செய்வது மாறன் ப்ரபந்தம். 'ஷேநகுடிநெநநக்ஷிஶ்ருஷெ' என்றபடி நாயாத்யாசார்யர்களும் அவர்கள் க்ரந்தங்களும் ருசிக்கவே மதனபாரவச்யம் அகலும். பேரின்பம் குதிர்ந்தபிறகும் சிற்றின்ப ஆசை எழுமோ? த்யஜ்ஞெ வூதிநநீய விவியொஷஹோஃ— வேதாந்தங்கள் இவர்கள் ஸச்சரிதங்களையும் பெருமைகளையும் மிகவும் புகழ்ந்திருக்கின்றன. அவர்கள் பஜந அர்ச்சநாதிகளையும் யாவதாயுஷம் அவர்களை பூஜிப்பதையும் ச்லாகித்து நமக்கு விதித்திருக்கின்றன. பரப்ரஹ்மவித்யையைக் கூறுவதாகத் தொடங்கிய முண்டகம் யம் யம் லொகம் மநஸா ஸம்விஹாதி விஶுத்த ஸத்வஃ காமயதெ யாம்ஶ்ச காமாந் | தம் தம்

லோகம் ஜயதெ தாம்ஸு காரோநு தஸூாஉாதூ ஜூம் ஹூவடியெக ஹூுதிகாஃ॥' என்று ஆத்மவித்யை ஸர்வாபீஷ்டங்களின் ஸித்திக்காகவும் அர்ச்சிக்கவேணும் என்று கூறிற்று. 'ஹூதிகாஃ' என்பதற்கு 'ஸத்தாகாமன்' என்றும் பொருள். 'ஸஸூதாயாம ஸூாஹாயஜி' என்பது போல 'ஸுவாயடுவாநு வாா ஷெ வெ' என்று மதுப்பால் ஆசார்யரோடு நித்ய யோகத்தைக் கூறிற்று. தைத்திரீயத்தில் இவர்களுடைய ஸுசரித வ்ருத்தாந்தங்கள் அநுஷ்டாபகங்களாகவும் ஸர்வஸம்சயச்சேதிகளாகவும் ச்லாகிக்கப்பட்டதும் இங்கே ஸூசிதம். 'தமெஹூவம் விஃஷெ யஜூ ஸூாதா' 'ப்ராவாஸொ கஸூ கீஃயொ ஜநா ஸஃ' 'ஸவெடிஷெ ஷெவா ஸமிரோவஹஜி உதூாஜிஷூ உவூரோ நாரேணவஸக யூவகவ ஸமிஸவேடுணாஜிரூவொ வூதூா ஞொ யெஷாம தெ' என்று ஸாரவிவரணீ. ஆமரணம் ஓர் ஜ்ஞாநயஜ்ஞமாகக் காலம் கழிப்பவர் ஞாதவூ- எவ்விதத்திலும் நமக்கு விச்வஸநீயரான, ஶரணூஉவதி- நமக்குச் சரணமாக வேணுமென்றே அநாதிகாலமாய்க் காத்திருக்கும் தாய் தந்தை மிதுனத்தின், உயாஜிவூா வமா வூாவகாஃ- தயையெனும் மந்தாகினீப்ரவாஹங்கள் நம்மேல் மோதி அலைத்து ஜில் என்று நினைக்கச் செய்பவரும், பகவானுடைய தயையை நம்மீது ப்ரஸரிக்கச் செய்யும் த்வாரமானவர்கள். ஸூஊ-வாதப்போர் வேகத்தில் ஜயிக்கவேண்டுமென்ற அந்தந்த ஸமயத்திற்குத்தக்கபடி ச்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களின் பொருளைத் தப்பாக உரைக்கத் துணிவதும், விஷூவ- தனக்கே ப்ராந்தி, கநூயாஞூஹணம், ஸம்சயம் முதலியதுள்ளவரும், விஷூஸஹ- தனக்கு உண்மைப் பொருள் தெரிந்திருந்தும் ஏதோ எண்ணத்தினால் ச்ருதியையும் ஏமாற்றி கேட்பவரையும் ஏமாற்றும் ப்ரதாரணம் ஆகிய, உஉவி- இந்த வழிகளில் நுழைவதற்கே, ஞெ தெஶிகாஃ- இந்த வழிகளிருக்குமிடத்திற்கே நெருங்காமல் தூரநடப்பவருமான, தெஶிகாஃ- வழிதெரியாமல் திகைப்பவர்களுக்கு ஸரியான வழியைக்காட்டுபவரான ஆசார்யர்கள், உஹ- இங்கே, ஸூஉஹாம்- இன்பமாய்ருசிக்கவேணும். 'அண்ணிக்குமமுதூரும் என்னாவுக்கே' இன்பமெய்தினேன்' என்றபடி தித்திக்கவேணும். 'ஶஹவகுநம் ஸூாஉூமஶாவாநுநவ ஶுவடு கம்' என்ற ப்ரமாணம் ஸ்தோத்ரபாஷ்யத்தில் 'ஸூாஉயஹிஹ ஸவெடுஷாம தூயூஹாயடும் ஸாஉாஞூடுஹம்' என்றவிடத்தில்காட்டப்பட்டது. வேதாந்தத்தை ரஸமாக இன்புறச் செய்பவர். 'நாயூாஉயஃ' என்றதற்கு 'நாயூ வூயாநாஃ' என்று பொருள் கூறி விஷ்வக்ஸேந பராங்குசாதிகளையும் க்ரஹிப்பதென்று ஸாரதீபிகை. முன்னுள்ளவர் பின்னுள்ளவர் எல்லோரையும் க்ரஹிக்கலாம்.

(இப்படிப் பாடுமிவன், விவேகர், ஸுமதி, விஷ்ணுபக்தி ஆகிய மூவரால் அநுக்ரஹபருமான த்ருஷ்டியால் பார்க்கப்பட்டவனாய் மேல் கார்யமுடிவிற்காகச் செல்கிறான்.)

ஸுமதி— க்ருதக்ருத்யரான நம் குலபதி எங்கே போயுளர்.

விஷ்ணுபக்தி— அநிகேத:— ஓர் வாஸக்ருஹமென்பதில்லாமல் 'யதூ ஸாயமஹூஹகோ ஸிதஃ' ஸஞ்சரித்துக் கொண்டேயிருக்கும் மார்க்கத்தில் எந்த இடத்தில் ஸூர்யாஸ்தமனமாகி ஸாயங்காலம் வருகிறதோ அதுவே அன்று ராத்ரி (வஸதியில்) வஸிக்கும் க்ருஹம். வஸதியாக இருப்பவர் யதூ ஸாயம் அதுவே ராத்ரி தங்கும் க்ருஹம். ஓரே பதமாக யதூ ஸாயமஹூஹொ முநிஃ' என்று முநிலக்ஷணம் கூறுவர். ஸந்யாஸிக்கு மிகப் பொருந்தும். 'அநிகேதஃ' என்பதும் அதற்குப் பொருந்தும். யஉா ஸூவூதிஃ- யத்ருச்சையாகக் கிடைத்ததைக் கொண்டு தேஹயாத்ரை, 'பிக்ஷாடநம்' என்று விசேஷிக்காவிடினும், ஸந்யாஸத்திற்குப் பொருத்தமானது. யொஜீ- ப்ரஹ்மத்தினிடமே ப்ரதிஷ்டிதமான மனமுடைய

யோகீ, 'ஸ ப்ருஹ்மயோக யுக்தாத்மா' என்றபடி ப்ரஹ்மநிஷ்டன். ப்ருஹ்மயோகீ. இப்படி ஸங்யாஸியாக இருக்கலாம். அயவா— அல்லது,

> ஸ்ரீரங்கம் வ்ருஷகிரிவரம் ஹஸ்திகிரிம் ஸ்ரீமது
> அயோத்யாபுரம் ஸாகேதம் மயூராபுரிமப்யாதத்
> க்ஷேத்ரம் ஹரிக்ஷேத்ரம் வஸதியாக்ருதி |
> ஆத்மா ஸம்ஸ்ருத ஸம்ஸ்ருதஸ்வதஸ்யாதா-
> தேஹபாதாவதியாவ யதா ஸம்ஸ்ருதியது
> தத்ரைவ வஸேத் யதேகதாநம் மந: ||

ஸங்யாஸமில்லாமல் நல்ல ஸ்தாநங்களில் நாராயணாலயங்களில் வஸிக்கவும் போயிருக்கலாம். ஸ்தாநவிசேஷாதிகாரத்தில் முதலிலும் கடைசியிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் பாடியிருப்பதெல்லாம் இங்கே சேர்த்துப் பாடியுள்ளது. ஸ்ரீரங்கம்— ஆராதவருளமுதம் பொதிந்த கோயில், வ்ருஷகிரிவரம்— வேங்கட வெற்பென விளம்பும் வேதவெற்பு, 'வ்ருஷகிரிவீதி' என்ற வேதவாக்கை 'வ்ருஷபம்' என்று வேதம் வர்ணித்தது. ஹஸ்திகிரிம்— பத்தர்வினை தொத்தறவறுக்கு மணியத்திகிரியே, ஸ்ரீமதுஅயோத்யாபுரம்—யாதவகிரி, ஸாகேதம்— அயோத்யை, மயூராபுரம்—வடதுரை, ஹரிக்ஷேத்ரம்— நாராயணக்ஷேத்ரமான, வஸதியாக்ருதிம், ஆகிய இந்த க்ஷேத்ரங்களை, ஆத்மா ஸம்ஸ்ருதஸ்வதஸ்யாதா— 'தமேவம் விதுஷ:' என்ற ந்யாஸவித்யாநுவாகப்படி உள்ளே ஸம்ப்ருதமான (பயிற்சிசெய்து வளர்க்கப்பட்ட) ஆத்மயாகத்திற்கு முடிவு அவப்ருதமாக, 'யந்மரணம் ததவப்ருத:' என்று ஓதப்பட்ட, தேஹபாததோதியாவ— தேஹபாதம் தேஹம் விழுதலெனும் மங்களமுதிக்கும் வரையில், (ஸங்கல்பஸூர்யனுதித்து நித்யப் பகல் ஸித்திக்குமளவில்) ஸம்ஸ்ருதி உபேக்ஷ்ய— இப்பொழுது அடைந்து வஸிப்பார். யதா— அல்லது, யது ஏந: ஏகதாநம்—எந்த இடத்திலிருந்தால் மனது ஏகாக்ரதமாக, பகவதேகபரமாக ப்ரதிஷ்டிதமாயிருக்குமோ, (தத்ர) யத்ரக்வாபி— அப்படிக்கொத்த எந்த விடத்திலாயினும் (வஸிப்பார்) 'நிராஹாரோ யத்ர யத்ர வஸேஜ்ஜந: | தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கரம் ததா' என்ற வசனமும், 'யத்ரைகாக்ரதா தத்ராவிஶேஷாத்' என்றஸூத்ரமும், அதில் பராமர்சிக்கப்பட்ட 'மநோநுகூலே' என்ற ச்வேதாச்வதரச்ருதியுமிங்கே நினைக்கப்படுகின்றன. தேஹபாதம் ஓர் க்ஷேமோதயம்.

மேலும்—

> ஸ்வயம் வ்யக்தக்ஷேத்ரே விபிநவிஷயே வா
> விதிவஶாத் ப்ரஶஸ்தே துஷ்டே வா க்வசந
> ஸமயே த்யக்தவபுஷ: | முகுந்தஸ்த்யக்த்வா
> தத்வம் தயிதமஹிமா மோசயதிவாந் ஸ்வப
> தாநந்யப்ராப்யம் ஸ்வபதமநபாயம் நயதி ||

கடைசி முடிவுக்கு இன்ன இடந்தானென்ற நியமமில்லாததுபோல காலநியமமுமில்லை. ஸ்வயம் வ்யக்தக்ஷேத்ரமாயிருக்கட்டும், வனப்ரதேசமாயிருக்கட்டும், விதிவசத்தால், பகவத்ஸங்கல்பவசத்தால், ப்ரஶஸ்தே, துஷ்டே வா—(மரணத்திற்கு) ச்லாக்யம், அல்லது அச்லாக்யம் என்று கூறப்பட்ட, க்வசந ஸமயே— எந்தக்காலத்திலும், த்யக்தவபுஷ:—தேஹத்தை விட்டவனுக்கு, த்யக்தவ்யதிதமஹிமா— வேதாந்தங்களால் மோக்ஷம் தருபவன் என்று கொண்டாடப்பட்ட, முகுந்த: ஸ்வயம்— அந்த இம்முகுந்தன், க்ருபயா— தங்கருணையால் பாபம் கழிந்த, ஸ்வபதம் ப்ரபந்நாந்— தம் திருவடி பணிந்தவர்களை, அநபாயம் ஸ்வபதம்— யாதொரபாயமில்லாத தம் ஸ்தானத்திற்கு, நயதி— சேர்ப்பிக்கிறார். (ஆதிவாஹிகர்கள் அவருடைய பரிகரமே.)

இப்பொழுது நிகில ஜகத்திற்கும் ஓர் உயிரான ஸர்வாந்தர்யாமியும், நித்யநிரவத்யந தேஹத்திற்குள் இவனோடு வஸித்துவருகையிலும் நிரவத்யரான, தேவேந— ஹார்தேனுல்,

நிஜநகர- தம் திருநகருக்கு, நிநீஷிதஃ- கொண்டுபோக விரும்பப்படுகிறார்.

மேலும்— அளவிடக்கூடாத மஹிமையை யுடைய இவரிடம் மற்றோர் ஆச்சர்யம் காணப் படுகிறது.

க்ருதமிஹ து³ரிதம் மோஹவஶ்யதயா
கிமபி முகுந்த³க்ருபாம்பு³தி⁴மக்³நம் ।
பவநதநயவாலவஹ்நிவத்த்வா
ந த³ஹதி யக்ஷ்யதி யோஜிதஃ பரேஷு ॥

மோஹவஶ்யதயா-தெரியாமல், இஹ-இங்கே க்ருதது³ரிதம்-செய்யநேர்ந்தபாபம், கிமபி- எது இருந்தாலும், முகுந்த³க்ருபாம்பு³தி⁴மக்³நம்- முகுந்தனுடைய அருள்கடலில் முழுகி இருக்கும் இவரை, ந த³ஹதி- தஹிப்பதில்லை பரேஷு யோஜிதஃ யக்ஷ்யதி- இவர் விரோதிகளிடம் சேர்க்கப்பட்டு தன் தாஹசக்தியை செலுத்துகிறது. எதுபோலென்றால், பவநதநயவாலவஹ்நிவத்- ஹநுமார் வால் நியாயம்போல். அவர் வாலில் சேர்க்கப்பட்டிருந்த அக்நி அவரைச் சுடாமல், அவருடைய விரோதிகளான ராக்ஷஸர்கள் க்ருஹம் முதலியவற்றில் சேர்க்கப்பட்டு அவற்றை தஹித்ததுபோல். பூர்வ புண்யபாபங்களைப் பற்றி 60-ம் ச்லோகத்தில் கூறியாய்விட்டது. புண்யபலஸங்க்ரமணம் இந்தத்ருஷ்டாந்தத்திற்குச்சேராது. ஹநுமார் முதலங்கத்தில் குறிக்கப்பட்டார். நடுவிலும் 6-வது அங்கத்தில் குறிக்கப்பட்டார். இங்கே முடிவிலும் அவர் நினைவு. சரணாகதனை விபீஷணனைச் சேர்க்க சிபார்சு செய்த ஸசிவர், 'ஆச்ரயாசம்' என்ற அக்நியின் பெயரும் ப்ரபாவமும் நீங்கின.

ராஜா:— (ஸந்தோஷ பஹுமதிகளுடன்) அம்மா! 'ந தத்ர சக்ஷுர்க³ச்ச²தி' 'தே³வதே³வம்' 'அதே³ஶ்யம்' என்றபடி அப்ரத்யக்ஷமான ப்ராஹ்மத்தை ஸாக்ஷாத்கரிக்கச் செய்யும் அத்புத சக்தியுடைய உம் ப்ரபாவத்திற்கிதென்ன ஆச்சர்யம். ('தத்³ப⁴க்த்யா ஸாக்ஷாத்' என்று கூறப்பட்ட காணமுடியாத ப்ராஹ்மமும், 'ப⁴க்திஸம்ராதநே' ஸம்ராதமெனும் பக்தியாகிய உம் மூலமாக ப்ரத்யக்ஷம் போல காணப்படுகிறதென்று ஸூத்ரம்.)

(தன் மனதிற்குள்) மஹாப்ரபாவையான இவளை நான் வந்தனம் செய்யவேணும்.

(ப்ரகாசமாய்)

விதி⁴ப⁴வமுக²தே³வ விஷ்ணுப⁴க்தே
ப்ரணிபதநேந வய꞉ க்ருதாபராதோ⁴ऽபி ।
உசிததம ஸபர்யயா விஶ்வபூஜ்யாம்
ஹரிபத³பத்³மரதிம் மஹீயஸீம் த்வாம் ॥

விஷ்ணுப⁴க்தே— அம்மா! மஹீயஸீம்- மிகப்பெரியதான, ஹரிபத³பத்³மரதிம்-ஹரிசரணஸரோஜங்களில் இன்பரஸமாகிய, த்வாம்— உம்மை, வய꞉ க்ருதாபராதோ⁴ऽபி- வயதில் பெரியவனாயினும், (பக்தி இப்பொழுதுதான் பிறந்தவள். விவேகனுக்கு மிகவும் சிறியவள்) விஶ்வபூஜ்யாம்- தேவர்களெல்லோருக்கும், உலகமுழுவதற்கும் பூஜ்யையான உம்மை, விதி⁴ப⁴வமுக²தே³வ-விச்வத்திற்கே பூஜ்யையான உம்மைப் பூஜிக்காமலிருப்பது முறையல்ல. 'தேஜஸாம் ஹி ந வய꞉ ஸமீக்ஷ்யதே' 'கு³ணா꞉ பூஜாஸ்தா²நம் கு³ணிஷு ந ச லிங்க³ம் ந ச வய꞉' என்பர். ப்ரணிபதநேந— ஸாஷ்டாங்கப்ரணாமத்தால் உசிததமஸபர்யயா- தக்கபடி மர்யாதை செய்கிறேன்.

(ஸாமதியை நோக்கி) நாமிவளை ப்ரதிஷ்டை செய்திருந்தாலும், நாம் ப்ரதிஷ்டை செய்யும் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரிப்பதுபோலிவளை நீ நமஸ்கரிக்கவேணும்.

விஷ்ணுபக்தி:— (விநயத்துடன்) அநாதிகாலமாய் ஸம்ஸாரஸமுத்ரத்தில் முழுகியிருந்த நம் குலபதியான புருஷனைக் கைதூக்கிவிட்ட தமையனாகிய உமக்கு பதில் ப்ரணாமம் செய்ய ஆசைப்படுகிறேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

"திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம்"

நெறிந்த கருங்குழல்

"ஹே! தெய்வநாயக! நின் அருளெனும் சீரோர் அரிவையானதென, இருள்செக வெமக்கோர் இன்னொளிவிளக்காய், மணிவரையன்ன நின் திருவுருவில், அணியமாரகத்தலங்கலயிலங்கி, நின்படிக்கெல்லாம் தன்படியேற்க, அன்புடன் நின்னோடு அவதரித்தருளி" என்று ஸர்வேச்வரன் ஸ்ரீராமனைத் திருவவதரித்தபோது, அவ்வவதாரத்திற்கு ஏற்ப ஸீதையாய்த் திருவவதரித்த பிராட்டி, தனது அருள் முதலிய குணநலங்களை லோகத்தார் அறிந்து தன்னை அடைதற்காகத் தனது அநுஷ்டானமுகத்தாலே வெளியிடத் திருவுள்ளம்பற்றி, தண்டகாரண்யத்தில் எழுந்தருளியிருந்தபோது, 'இராவணன் பிரித்தான்' என்று ஒரு வ்யாஜத்தாலே லங்கையில் - அசோக வநிகையில் ராக்ஷஸிகள் சூழச் சிறையிலிருந்தாள். (இதனாலேயே 'சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது ஸ்ரீமத்ராமாயணத்தில்' என்னும் பெரியோர்பணிப்பு அவதரித்தது.) அப்போது ஸ்ரீராமன் தான் கொண்ட மநுஷ்யபாவனையினாலே அப்பிராட்டிபோன இடம் அறியாமல் இளைய பெருமாளுடனே அவளைத் தேடிக்கொண்டே பம்பாதீரத்தில் எழுந்தருளி ஹநுமான்மூலமாய் ஸுக்ரீவனுடன் ஸக்யம் செய்துகொண்டு, அவன் தமையனான வாலியைக் கொன்று ஸுக்ரீவனுக்கு முடிசூட்டிய பின் மழைக்காலம் முடியுமளவும் ப்ரஸ்ரவணகிரியிலே தங்கியிருந்தான். மழைக்காலம் நீங்கியதும் லக்ஷ்மணனைக்கொண்டு ஸுக்ரீவனை வரவழைக்க, அவன், பிராட்டியைத் தேடுதற்காக திக்குகள்தோறும் வானரர்களை அனுப்புகையில், தெற்கு திக்கில் அங்கதன், ஜாம்பவான், ஹநுமான் முதலியோரை ப்ரதானமாகவைத்துப் பெருந் திரளான வானரப் படையை அனுப்ப, 'அநுமான் தவிர வேறொருவரால் இக்காரியம் கைகூடாது' எனத் திருவுள்ளம்பற்றிய ஸ்ரீராமபிரான் பிராட்டியைக் காணும்போது அவளுக்கு நம்பகமுண்டாகுமாறு சொல்லும்படி பல அடையாளங்களையும் அருளிச்செய்து, தனது மோதிரத்தையும் அவன் கையிற் கொடுத்தான். அவ்வண்ணமே அநுமான் கடல்கடந்து சென்று இரவில் இலங்கையிற் புகுந்து, அங்குப் பலவிடங்களிலும் ஸீதாபிராட்டியைத் தேடிக் காணாமல், கடைசியில் அசோகவநிகையில் எழுநூறு ராக்ஷஸிகள்சூழ நடுவிலிருந்தபிராட்டியைக்கண்டு, பல காரணங்களால் 'இவளே பிராட்டி' என உணர்ந்து மகிழ்ந்து, அங்குள்ள சிம்சுபா வ்ருக்ஷத்தின் மீது மறைந்து நிற்கையில், ராவணன் அங்கு வந்து ஸீதையைப் பலவாறு வேண்டவும், ஸீதை அவன் கருத்துக் கிணங்காது அவனைப் பலபடியாகப் பழிக்கவே, ராவணன் சினந்து 'இவளை மிகவும்வருத்தி வசப்படுத்துக' என்று அரக்கிகளுக்குக் கட்டளையிட்டுச் சென்றான். அரக்கியரும் இராவணன் ஏவலால் முன்னிலும் பன்மடங்கு பிராட்டியை வருத்தத் தொடங்க, ஸீதை, 'இனி நம்மால் உயிர்வைத்துக்கொண்டிருக்க முடியாது' என்று அறுதியிட்டுத் தன் உயிரை விடும்படி யத்தனிக்கையில், அநுமான் 'இனி நாம் தாமதிக்கக்கூடாது' என நினைத்து செவிப்பட்டபோதே இனிமையைத் தரவல்ல 'ராமோ தசரதோநாம ரத குஞ்ஜர வாஜிமான்' இத்யாதி ராமகுணசேஷ்டிதமான வாக்யங்களைச் சொல்ல பிராட்டி, 'இத்தனைநாளும் கேட்காததொன்று இப்போது காதில்விழக் காரணமென்ன?' என்று ஒலி வந்தவழியெ பார்த்து மரத்தின் மேலிருந்த அநுமானைக் கண்டு மூர்ச்சித்துப் பின் தெளிவடைய, அநுமான் இறங்கிவந்து அப்பிராட்டியின் திருமுன்னர் கைகுவித்துக்கொண்டு சில அநுவர்த்தன வார்த்தைகளைச் சொல்ல, அவள் பின்னும் சங்கைகொள்ளவே அநுமான் அவள் சங்கையைப் போக்கும்படி இராமபிரான் தன்னிடம் சொல்லிய அடையாளங்களையெல்லாம் சொல்லி முடிவில் ராமநாமாங்கிதமான திருவாழியையும் காட்டி அச் சீதாபிராட்டியின் ஸந்தேஹத்தைப்போக்கி அவளை உகப்பித்தான்

இப்படி அநுமான் ஸீதாதேவியைத் தெளிவித்தற்பொருட்டு அடையாளங்களை ஸ்பஷ்டமாக அத்தேவியாரிடம் விண்ணப்பஞ்செய்து, தான் 'ராமதூதன்' என்பதை அறிவித்துப் பின்பு திருவாழியையும் கொடுத்து அவள்

திருவுள்ளத்தை உகப்பித்த ப்ரகாரத்தைப் பெரியாழ்வார் அநுஸந்தித்து, அவற்றை அங்ஙனமே ஆதராதிசயத்தாலே இத் திருமொழியில் அருளிச்செய்கிறார்.

1. நெறிந்த கருங் குழல்மடவாய்
நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன்
சிலையிறுத்து நினைக்கொணர்ந்த(து)
அறிந்தரசு களைகட்ட
அருந்தவத்தோன் இடைவிலங்க
செறிந்தசிலை கொடுதவத்தைச்
சிதைத்ததுமோர் அடையாளம்.

(பெரியாழ்வார் திருமொழி 3-ம் ப. 10-ம் தி.)

[பொழிப்புரை] நெறிப்புக்கொண்ட கருமையான கூந்தலையுடைய மடப்பத்தையுடைய ஸீதாதேவியே! உனது அடியவனான எனது விஜ்ஞாபனமொன்றைக் கேட்டருள வேணும். நெருங்கின ரத்நங்கள் பதித்த கிரீடத்தைத் தரித்த ஜனக மஹாராஜன் கன்யாசுல்கமாக ஏற்படுத்தின ருத்ரதநுஸ்ஸை முறித்து ஸ்ரீராமன் உம்மை விவாஹஞ் செய்ததைத் தெரிந்துகொண்டு, துஷ்டராஜாக்களை பயிரில் களைபோல் காய்ந்தழித்த அருமையான தவத்தையுடைய பரசுராமன் நடுவழியில் தடுக்க, அப்பரசுராமன் கையிலிருந்த விஷ்ணுதநுஸ்ஸை வாங்கிக்கொண்டு அவனுடைய தவத்தை அழித்ததும் ஓர் அடையாளமாம்.

[விசேஷ உரை] சிவதநுர்பங்கம்பண்ணிச் சீதாபிராட்டியை மணந்துகொண்ட வகையையும், வைஷ்ணவதநுர்பங்கம் பண்ணிப் பரசுராமனை வென்றவகையையும் இப்பாசுரத்தால் அடையாளமாகக் கூறுகின்றான் அநுமான்.

மடவாய்!—மடவாள் என்பதன் விளி. மடப்பத்தையுடையவள் என்பது பொருள். மடப்பமாவது— மனத்திற்கொண்டது விடாமை. ராவணனது சிறையிலிருக்கும்போது பெருமாளைத்தவிர வேறொன்றைப் பிராட்டி மனத்தில் நினையாமலிருத்தலால் 'மடவாய்' என விளித்தான். அல்லது, லக்ஷ்மணன் வார்த்தையை நம்பாமல் ராவணன்கைப்பட்டாளாதலால் இவ்வாறுவிளித்தான் என்றும் கூறலாம். இவ்விடத்திலே மடவாய்! என்பதற்கு அறியாமையுடையவளே! என்பது பொருள்.

பிராட்டியின் திருமணத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ரகுவீரகத்யத்தில் 'பரிஹ்ருத ... ... காதல' [எல்லா ராஜாக்களின் ப்ரார்த்தனையை நிராகரித்த ஜனகருடைய குமாரியின் குசங்களின்மீது விஹரிக்கத் தகுந்த உள்ளங்கைகளையுடையவரே! என்றும், பரசுராம ஸமாகம வ்ருத்தாந்தத்தை, 'சதகோடி ... ... பாரமேஷ்ட்யா' 'க்ரதுஹர ... ... பரிடிஷ பரிக' [வஜ்ராயுதத்தினும் நூறுமடங்கு உறுதியுள்ள பரசுமுனிவர் கையில்தரித்த ஒருவராலும் வளைக்கமுடியாத தன்வில்லை வளைத்தும் புகழை வெளியிட்டவரே! தக்ஷயாகத்தை நாசம்செய்த ருத்ரனுடைய கைலாஸ பர்வதத்தைப் பிடித்து பந்துவிளையாடுவது முதலிய உலகத்துக்கு ஹிம்ஸையைச் செய்தவனும், திக்குகளின் எல்லையளவும் பரப்பின புகழையுடையவனுமான பத்துதலைகளையுடைய ராவணனையடக்கும் ஸாமர்த்யம்வாய்ந்த ஆயிரம் கைகளையுடைய கார்த்தவீர்யார்ஜுனன் முதலிய ராஜவம்சங்களின் ரக்தப்பெருக்கால் நிரப்பப்பட்ட விசாலமான தடாகங்களில் பித்ருதர்ப்பணஞ்செய்த பரசுராமனுடைய புண்ய லோகங்களை நாசஞ்செய்த அழகிய கணுக்களையுடைய நீண்ட பாணத்தையுடையவரே!] என்றும் அநுபவித்தது நோக்கத்தக்கது.

சந்த்ரவம்சத்திற்பிறந்த யயாதி மஹாராஜனது மூத்தகுமாரனாகிய யதுவின் குலத்தவனாகிய க்ருதவீர்யனது குமாரனாகிய கார்த்தவீர்யார்ஜுனன், அத்ரிகுமாரனாய் விளங்குகிற நாராயணாம்சமான தத்தாத்ரேய மஹாமுனிவரை ஆராதித்து, அவருடைய அநுக்ரஹத்தால் ஆயிரம் தோள்கள் உடைமை, யுத்தத்தில் தனக்கே வெற்றி, நீதியான ராஜ்யபரிபாலனம், பகைவர்களா லவமானப்படாமை, மஹாபுருஷனால் மரணம் முதலிய பல வரங்களைப் பெற்று, பல யாகங்களையும் செய்து, தனது மூதாதையருள் ஒருவரான 'மஹிஷ்மான்' என்னும் அரசனால் உண்டாக்கப்பட்ட 'மாஹிஷ்மதி' பட்டிணத்தைப் பலகாலம் அரசாண்டு வந்தான். இவன் ஒருகாலத்தில் காட்டிற்சென்று வேட்டையாடலானான். அங்கவன் பரசுராமனது தந்தையான ஜமதக்னி முனிவரது ஆச்ரமத்தையடைந்து, அவரனுமதியா லங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகை

யில், அவரிடமிருந்த 'ஹோமதேனு' அவருக்கு எளிதில் பலசெல்வங்களையும் சுரந்தது கண்டு அதனிடம் ஆசைகொண்டு அவருடைய அனுமதியில்லாமல் பலாத்காரமாக அப்பசுவைக் கவர்ந்துபோக, அதனையறிந்த பரசுராமன் பெருங்கோபங்கொண்டு அச் சார்த்தவீர்யனிடம் போர்செய்து அவனைப் பதினோரு அக்ஷௌஹிணி ஸேனையுடனே நிலைகுலையச் செய்து, அவனது ஆயிரம் தோள்களையும், தலையையும் தனது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி 'இனி க்ஷத்ரியவம்சமே உலகிலில்லாதபடி அதனை வேரோடு களைவேன்' எனக் கோபாவேசங்கொண்டு, உலகத்திலுள்ள அரசர் பலரையும் *இருபத்தொரு தலைமுறை போர்செய்து அழித்து, அவர்கள் இரத்தத்தால் 'ஸ்யமந்தபஞ்சகம்' என்று ஐந்து குளங்கள் அமைத்து அவற்றில் நீராடி கார்த்தவீர்யன் குமாரர்களால் கொல்லப்பட்ட தம் தந்தைக்குத் தர்ப்பணம் செய்து சினம் தணிந்தார். அப்பரசுராமர் ஸீதா கல்யாணம் முடிந்து, தசரத சக்ரவர்த்தி, மக்களோடும், மருகிகளோடும் அயோத்திக்கு மீண்டுசெல்லுகையில் 'ராமா! உலகத்தில் கொழுத்த அரசர் இனி இல்லை என்று இதுகாறும் நிச்சிந்தையாயிருந்தேன்; எனக்கு இனியும் அங்ஙனமான அரசர் இருக்கின்றனரென்று தோன்றுமாறு நீ முறித்த வில்லோசை என் செவிப்பட்டமையால் மீண்டும் கோபம் தோன்ற வந்துள்ளேன்; முன் ஹரிஹர யுத்தத்தில் இற்றுப்போன சிவனது வில்லை முறித்ததைப் பெரிதாக நினைக்காதே; இந்த வில்லை வளைபார்ப்போம்' என்று ஒரு தனுஸ்ஸைக் கையிற் கொடுக்க, ஸ்ரீராமன், க்ஷத்ரிய வம்சத்தைப் பெரும்பான்மையும் வேரறுத்திட்ட உன்னை வதைத்துப் பழிவாங்கவேண்டுவதே முறையாயினும், நீ ப்ராஹ்மணனும் வேதவித்தும் தபஸ்வியுமாதல்பற்றி உன்னைக் கொல்லாது விடுகிறேன்; ஆயினும் இந்த வைஷ்ணவ அம்பு வளைக்கப்பட்ட பின்பு ஏதேனும் ஒரு லக்ஷ்யத்தின் மீது சென்றே தீரவேண்டும். அதற்கு இலக்கு என்?' என, பரசுராமன் 'நான் மனோவேகமாய் மஹேந்த்ரமலைக்குச் செல்லவேண்டியிருத்தலால், என் தவத்தையே அதற்கு இலக்காக்கிக்கொள்க' என்றார். அப்படியே ராமன் அவ்வம்பால் பரசுராமனது தவத்தை ஆகர்ஷித்தான் என்பது பின்னிரண்டடிகளில் கூறப்பட்ட விஷயம்.

2 அல்லியம்பூ மலர்க்கோதாய்!
அடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய்
துணைமலர்க்கண் மடமானே!
எல்லியம்போதினிதிருத்தல்
இருந்ததோர் இடவகையில்
மல்லிகைமா மாலைகோண்டங்
கார்த்ததுமோர் அடையாளம்.

[பொ-ரை] அகவிதழ்களையுடைய அழகிய புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட பூமாலை போன்றவளே! உமது திருவடிகளில் வணங்கின நான் விஜ்ஞாபனமொன்றை உம்மிடத்திற் சொல்லுவேன்:- ஒன்றோடொன்று ஒத்துத் தாமரைபோல் விளங்கும் கண்களையும் மடப்பத்தையுமுடைய மான் போன்றவளே! என் விஜ்ஞாபனத்தைச் செவிசாய்த்தருளவேணும். அழகிய ராத்ரிவேளையிலே இனிமையான இருப்பாக இருந்ததான ஒரு ஸ்தலவிசேஷத்திலே மல்லிகைப்பூவினால் தொடுக்கப்பட்ட சிறந்த மாலையினால் நீர் இராமபிரானைக் கட்டியதும் ஓர் அடையாளமாம்.

* ஜமதக்நி முனிவரது தலையைக் கார்த்தவீர்யார்ஜுன குமாரர் துணித்திட்டபோது, அவர் மனைவியான ரேணுகாதேவி இருபத்தொருமுறை தன் மார்பில் அடித்துக்கொண்டு புலம்பினது பற்றி, அரசர்களை 21 தலை முறைப் பரசுராமன் ஒழித்திட்டான் என்றும், தான் விரதமாகப்ரதிஜ்ஞை செய்தபடி அவ்வரசர்களது இரத்த வெள்ளத்தால் 'ஸ்யமந்த பஞ்சகம்' என்று ஐந்து தடாகங்களை ஏற்படுத்தி அவற்றில் தந்தைக்குத் தர்ப்பணம் செய்திட்டாரென்றும் ஸ்ரீபாகவதத்தில் கூறியுள்ளது.

[வி—உரை] பிராட்டியும் பெருமாளும் நகரத்தில் இருந்த காலத்தில் ராத்ரிவேளையில் ஏகாந்தமான இடத்திலே உல்லாஸமாக இருக்கையில், ப்ரணயரோஷத்தினால் பிராட்டி ஸ்ரீ ராமபிரானை மல்லிகைமலர்மாலையைக் கொண்டு கட்டியதை அனுமான் அடையாளமாகக் கூறுகின்றான். இது மிகவும் அந்தரங்கமாக நடந்திருக்குமாதலால், இது, மற்றை அடையாளங்களைப்போல் அல்லாமல் சிறந்த அடையாளமாகும். வனவாஸம் சென்றமை இன்னும் கூறப்படாமையால், இச் செயலை நாட்டில் நடந்ததாகக் கொள்ளவேண்டுமேயன்றிக் காட்டில் நிகழ்ந்ததாகக் கொள்ளலாகாது. மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் திருவுள்ளத்தில் உதித்த இத்தகைய அபூர்வ அடையாளம் வால்மீகியத்தில் இல்லாததொன்று. இம்மாதிரியே ஸ்ரீ ராமபிரான் அனுமான் வாயிலாகச் சில அடையாளங்களைச் சீதைக்கு உணர்த்துவதாகக் கம்பர் தெரிவிக்கிறார். அவற்றுள் சிலவற்றை அநுபவிப்போம்.

'நடத்தலரி தாகுநெறி
நாள்கள்சில தாயர்க்(கு)
அடுத்தபணி செய்திவணி
ருத்தியென வச்சொற்(கு)
உடுத்ததுகி லோடுமுயி
ருக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடுமெயல்
நின்றது மிசைப்பாய்.'

[ஸீதே! காட்டுவழி கல்லும் முள்ளும் பரலும் இருத்தலால் நீ நடந்து செல்லுதற்கு அருமையானதாகும்; நான் வனத்துக்குப் போய் வரும் நாள்களோ கொஞ்சந்தான்; அதுவரையில் என் தாய்மார்க்குத் தக்க பணிவிடைகளைச் செய்துகொண்டு அயோத்தியிலேயே இரு;' என்று நான் சொல்ல, அந்த சொல்லைக்கேட்டும், உடுத்த வஸ்த்ரத்துடனேயும் உயிர் நீங்கினது போன்ற உடம்புடனேயும் என்னிடத்திற்கொண்ட கோபத்துடனேயும் என் அருகில் அவள் நின்றதையும் அனுமனே! நீ அவளுக்கு அடையாளமாகச் சொல்லுவாய்.]

'நீண்டமுடி வேந்தனருள்
ஏந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி
போதலுறு நாளின்
ஆண்டநகர் ஆரையொடு
வாயிலகலாமுன்
யாண்டையது கானெனை
விசைத்தது மிசைப்பாய்.

[நீண்ட கிரீடத்தையணிந்த தசரத சக்ரவர்த்தியின் ஆஜ்ஞையைத் தலைமேற்கொண்டு பெரிய ராஜ்யச் செல்வத்தை முதலில் ஏற்றுக்கொண்டு, பின்பு அச்செல்வத்தைக் கைகேயின் கட்டளையால் கைவிட்டுக் காட்டுக்குச் செல்லப் பிரயாணம் புறப்பட்ட பொழுது, நான் ஆள்வதற்குரிய அயோத்யாபுரியின் மதிலோடு கூடிய கோட்டை வாசலைக் கடந்து வருவதற்கு முந்தியே (என்னை நோக்கி ஸீதை) 'காடு எவ்விடத்திலுள்ளது?' என்று கேட்டதையும் நீ அவளுக்கு அடையாளமாகச் சொல்வாய்.]

3. கலக்கியமா மனத்தினளாய்க்
கைகேசி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தினனாய்
மன்னவனும் மறுதொழிய
குலக்குமரா! காடுறையப்
போவென்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடுமங்
கேகியதோர் அடையாளம்

[பொ—ரை] கைகேயியானவள், மந்தரையென்னும் கூனியால் கலக்கப்பட்ட மனத்தையுடையவளாய், தசரத சக்ரவர்த்தி தனக்கு முன் கொடுத்திருந்த வரங்களைக் கேட்க, அவள் வார்த்தையால் மனக்கலக்கங்கொண்டு தசரத ராசன் மறுத்துச் சொல்லமுடியாமல் வெறுமனே கிடக்க, 'உயர் குலத்தில் பிறந்த குமாரனே! காட்டிலே பதினான்கு வருஷம் வஸிக்கும்படி செல்' என்று சொல்லிக் கைகேயி விடை கொடுத்தனுப்ப, அக்காட்டிலே லக்ஷ்மணனோடு கூட ராமபிரான் போனதும் ஓர் அடையாளமாகும்.

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

8-4-56 ல் மாம்பலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருக்கும்போது 3 மணிக்கு ஸ்ரீமான்கள், சுதேசமித்திரன் ஆசிரியர் ஸி. ஆர் ஸ்ரீநிவாஸனும், கல்விமந்திரி கனம் ஸி. சுப்பிரமண்யமும் ஸ்ரீ அழகியசிங்கரை தர்சித்தார்கள். அப்பொழுது நடந்த ஸம்பாஷணைகள்:- ஸ்ரீ அழகியசிங்கர் தமது கல்வி திட்டத்தினால் தேசத்திற்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் நன்மைகளை விவரித்துக்கூறி தனிப்பட்டவர்கள் எந்த பரீக்ஷைகளுக்கும் அனுமதிக்கவேண்டும் என்று ஸாதித்தாயிற்று. தனிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிபெறுவது ஸுலபமென்றும் ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் அனுமதி கொடுப்பதில் நலனிருந்தாலும் எளிதில் சீக்கிரத்தில்ஸாதிக்க முடியுமா?என்பதை ஆலோசிக்கவேண்டுமென்று ஸ்ரீமான் ஸீ.ஆர் ஸ்ரீநிவாஸன் அபிப்ராயமிருந்தது.

அன்றே 4 மணிக்கு ஹைதராபாத் ப்ரதமர் கனம் ஸ்ரீராமகிருஷ்ணராவ் தன்னுடையகுடும்பத்துடன் வந்து விசேஷ உபஹாரங்களுடன் ஸம்பாவனை செய்து ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பித்தார். தனக்கு40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஸமாச்ரயணமாகியிருக்கின்றது அன்றும் இன்றும் அதன்மூலமாகவே தான் தனக்கு எல்லாச்ரேயஸ்ஸுமுண்டாகியிருக்கின்றது என்றுசொல்லி பெருமாளிடத்திலும் ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலும் பக்தியை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு 45 நிமிஷங்கள் வார்த்தையாடிக்கொண்டிருந்தார் அவரிடத்திலும் கல்விதிட்டத்தைச் சொல்லிவிட்டு ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தின் அபிவ்ருத்தி திட்டத்தைச்சொல்லி முக்கியமாக திருப்பதிமாதிரி மேல் அஹோபிலம் வரையில் போக்குவரத்து வஸதிகளைச் செய்யவேண்டும் என்றும் ஸாதித்தாயிற்று. அத்துடன் அந்ததேவஸ்தானத்தைச்சேர்ந்ததாகவே இருந்தகாடுகளும் மலைகளும் பாரஸ்டு இலாகாவில் எடுத்துக்கொண்டிருப்பதால் தேவஸ்தானத்திற்கு வரும்படிபோயவில்லை. பாடல்களிலிருந்தும் சாஸனங்களிலிருந்தும் தேவஸ்தானத்தைச்சேர்ந்ததாக ஏற்படுகிறது. ஆகையால் ஆந்திரகவர்ன்மெண்டாரும் ஹைதராபாத் கவர்ன்மெண்டாரும் தாராளமனப்பான்மையுடன் இதைகவனித்து முடிவு செய்யவேண்டுமென்றும் ஸாதித்தாயிற்று. ப்ரதமரும் தம்மாலியன்றவரை உதவிபுரிவதாகச் சொல்லிச் சென்றார்.

10-4-56ல் சைதாப்பேட்டையில் ஸ்ரீவரதாசாரியர். சோமல் ஸ்ரீசேஷாசாரியர் ஸ்ரீஜகந்நாதாசாரியர்முதலியவர்கள் ஊர்வாஸிகளின் பூர்ண ஒத்துழைப்பினால் பூர்ணமாக ஆராதித்தார்கள் ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அன்றிரவு அங்கிருந்துபுறப்பட்டு 3மைல் தூரமுள்ள மாம்பலத்திலுள்ள நங்கமங்கலம் ராஜாஎன்கிற ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர்க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு சென்னை கவர்னர் மே. தா. ஸ்ரீப்ரகாசா அவர்கள் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்தார். அவ்வமயம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸம்ஸ்க்ருதத்தில் அஹோபிலக்ஷேத்திரத்தைப்பற்றியும் ஸ்ரீ மடத்தின் பெருமையையும், தாம் கோரியிருக்கும் கல்வி திட்டத்தின் நன்மையையும், வர்ணாச்ரம தர்மங்களைப்பற்றியும் ஸாதித்தாயிற்று. பிறகு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவித்துவிட்டு தனதுமகிழ்ச்சியைதெரிவித்துக்கொண்டார். அன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் பூர்ணமாக ஆராதித்தார். ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். ஏற்கனவே நங்கமங்கலத்தில் ஆராதித்திருந்தும் பட்டணத்திலும் பூர்ணமாக ஆராதித்தார். அங்கிருந்து திருவல்லிக்கேணி வாஸிகளின் விசேஷப்ப்ரார்த்தனையின் பேரில் $3\frac{1}{2}$ மைல் தூரமுள்ள திருவல்லிக்கேணிக்கு நங்கநல்லூர் வழியாக எழுந்தருளியாயிற்று. திருவல்லிக்கேணி ஸமுத்ரக்கரை (பீச்) யிலிருந்து தந்தப் பல்லக்கில் விளக்கு மத்தாப்பூ வாத்ய கோஷங்களுடன் வீதிவலமாக மடத்திற்கு எழுந்தருளப் பண்ணினர்

கள். ஸ்ரீ கேசவ ஐயங்கார் ஸ்ரீ N. G. க்ருஷ்ண ஐயங்கார். பாதூர் ஸ்ரீ க்ருஷ்ணமாச்சாரியர், குதிச்சி ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர் முதலியவர்கள் சேர்ந்து 3 தினங்கள் பூர்ணமாக ஆராதித்தார்கள். வருஷப்பிறப்பு தினம் பாதூர் ஸ்ரீக்ருஷ்ணமாசாரியர் பெரிய திருமஞ்சனம் பண்ணிவைத்தார். மறுதினம் ராத்ரி இஞ்சினியர் கோபால ஐயங்கார் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார், திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேசிகனையும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் பட்டுகள் ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும்போது மத்வமடாதிபதி ஸ்ரீ அழகிய சிங்கர் ஸன்னிதிக்கு வரவேணும் என்கிறதன் விருப்பத்தை சொல்லியனுப்பினதின் பேரில் அதை அங்கீகரித்து 13-4-56 ஸாயங்காலம் வரலாம் என்று ஸாதித்தாயிற்று. அதன்படியே அன்று ஸாயங்காலம் 4-30 மணிக்கு ஆச்ரமத்திற்கு அவர் வந்தார். அவருடன் மத்வ வித்வான்களும் ப்ரபலஸ்தர்களும் வந்திருந்தார்கள். பொதுவாக படத்தின் யோகக்ஷேமங்களையும் அவர் ஸஞ்சார நோக்கத்தையும் விசாரித்து விட்டு த்வைத மதத்தில் ஜீவனுக்கு பரஸ்பரம் பேதகாகாரம் என்ன என்பதைப்பற்றி விசாரம் ஆரம்பமாயிற்று. எல்லா விசாரமும் ஸம்ஸ்க்ருதத்திலே நடந்தது. பேதகாகாரம் இன்னது என்றும், அதற்கு ப்ரமாணத்தையும் சொல்லாமல் போனால் த்வைத மதம் நிற்காது' என்று ஸாதித்தாயிற்று. அதற்கு அவர், த்வைத ஸித்தாந்தத்திற்கு மட்டுமா இந்தக் கேள்வி? என்றார். ஜீவ பஹுத்வம் சொல்லும் எல்லா ஸித்தாந்திகளுமே இதற்கு பதில் சொல்லவேணுமென்றும் மத்வ ஸித்தாந்தத்தில் எப்படி சொல்லுகின்றார்கள் என்றுதான் இப்பொழுது ப்ரச்னை' என்று ஸ்ரீ அழகிய சிங்கர் ஸாதித்தாயிற்று. அதைத் தொடர்ந்து ஒரு மணி நேரம் விசாரங்கள் நடந்தன. பிறகு நாழிகையாகிவிட்டபடியால் அதோடு கலைந்துவிட்டது. பிறகு பெருமாளை ஸேவித்துவிட்டு ஸந்தோஷத்துடன் புறப்பட்டுப் போனார். அடிக்கடி இம்மாதிரி ஸமாகமம் நேரவேணுமென்றும் சொன்னார்.

பிறகு அங்கிருந்து ராத்ரி புறப்பட்டு வில்லிவாக்கத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் நடுவக்கரை ஸ்ரீநிவாஸாசார்யர் க்ருஹத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பூர்ணமாக ஆராதித்தார். ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அங்கிருந்து $2\frac{1}{4}$ மைல் தூரமுள்ள பெரம்பூருக்கு எழுந்தருளியாயிற்று. 16-4-56ல் இஞ்சினியர் ஸ்ரீ V. S. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்ரீ வீரராகவாசாரியர் முதலியவர்கள் பூர்ணமாக ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணி வைத்தார்கள். வில்லிவாக்கத்திலும், பெரம்பூரிலும் திருவுள்ளூர் கோயில் ஏஜண்ட் வந்திருந்து ஸ்ரீவீரராகவன் ப்ரஹ்மோத்ஸவத்திற்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார். சேத்துப்பட்டு முதலிய இடங்களில் மேற்கொண்டு ஆராதிப்பவர்கள் ஸ்ரீ அழகிய சிங்கர் இப்பொழுதே தொடர்ந்து எழுந்தருளப் போவதாக எங்களுடைய பந்து மித்ரர்களுக்குத் தெரிவித்துவிட்டபடியால் இப்பொழுதே தொடர்ந்தெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்ததின் பேரில் அன்று ராத்ரி பெரம்பூரிலிருந்து 4 மைல் தூரமுள்ள சேத்துப்பட்டிற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஷேட் அவர்கள் 17, 18 இரண்டு தினங்கள் பூர்ணமாக ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். அங்கிருந்து $2\frac{1}{2}$ மைல் தூரமுள்ள பாராஞ்சி ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் க்ருஹத்திற்கெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் ஸ்ரீராமநவமி தினம் பக்தி ச்ரத்தையுடன் பூர்ணமாக ஆராதித்தார். அபிகமனத்தின்போது பெரிய பெருமாளுக்கும் ராமனுக்கும் திருமஞ்சனம் நடந்தது. ஸ்ரீமத்ராமாயணம் அவதார கட்டம் ஸேவிக்கப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கர் அர்த்தம் ஸாதித்தாயிற்று. அப்பொழுது ஸ்த்ரீகள் தர்மத்தைப் பற்றி ராமாயணத்தில் ஏற்படும் விஷயங்களையும் ஸாமாந்யமாக துராசாரமில்லாமலிருப்பதே ஒரு நல்ல ஆசாரமென்று சொல்லலாமென்பதையும் அவதார கட்டத்திலுள்ள ச்லோகங்களில் ஏற்படுகிறது என்றும் ஸாதித்

தாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் தமயன் பிள்ளை ராத்ரி டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு 1 மைல் தூரமுள்ள முத்யாலுபேட்டைக்கு எழுந்தருளியாயிற்று. 20–4–56ல் ஸ்ரீவராஹாசாரியர், பாராஞ்சி, ஸ்ரீசக்ரபாணி ஐயங்கார் மங்கலம் ஸ்ரீராமானுஜாசாரியர், நரஸிம்மாசாரியர் முதலியவர்கள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியர் க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். காலையில் திருமஞ்சனமும் ராத்ரி டோலோத்ஸவமும் நடந்தது. அவ்விடத்திலிருந்து மைலாப்பூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின் பேரில் 5 மைல் தூரமுள்ள மைலாப்பூருக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியர், ஸ்ரீ ரங்காசாரியர், ஸ்ரீ S V வேணுகோபாலாசாரியர் முதலியவர்கள் பூர்ண குடும்பத்துடன் எதிர்கொண்டழைத்தார்கள். தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக ஸ்ரீ தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. 21-4-56ல் ஸ்ரீ T V S சந்தானம் ஐயங்கார் திருமஞ்சனம் டோலோத்ஸவம் பண்ணிவைத்து ஆராதித்தார் 22-4-56 த்வாதசி தினம் ஸ்ரீ டால் நரஸிம்ஹாசாரியர் பூர்ணமாக ஆராதித்தார். ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார் பிறகு அங்கிருந்து 1 மைல் தூரமுள்ள லக்ஷ்மீபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு பூண்டி ஸ்ரீவாஸுதேவாசாரியரும் ஸ்ரீமதி யதுகிரி அம்மாளும் பூர்ணமாக ஆராதித்தார்கள். பெரிய திருமஞ்சனம் (எல்லாபெருமாளுக்கும்) பண்ணிவைத்தார்கள். பெருமாளுக்கு சுமார் 1000 ரூபாய் பெருமானமுள்ள தங்க சங்கலியில் கோர்க்கப்பட்ட வைரப்பதக்கம் ஸமர்ப்பித்தார்கள், பெரியதகடி ஒன்றுபெருமாளுக்குஸமர்ப்பித்தார்கள். இவர்கள் நடந்த தை மாதம் பூண்டியில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி 5 தினங்கள் ஆராதித்தார்கள். ஸுமார் 3000 ரூபாய் பெருமானமுள்ள அபயஹஸ்தமும் நெக்லஸ்ஸும் ஸமர்ப்பித்திருக்கிறார்கள். ஸ்ரீ காளி கிருஷ்ணமாசாரியர் முதலியவர்களுடைய விசேஷப்ரார்த்தனையின் பேரில் $2\frac{1}{2}$ மைல் தூரமுள்ள திருவல்லிக்கேணிக்கு மறுபடியும் எழுந்தருளியாயிற்று. வானமாமலை மடத்தில் எல்லா ஏற்பாடுகளும் ஸௌகர்யமாகச் செய்து வைத்திருந்தார்கள். அன்று பூர்ணமாக ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்திருந்தார்கள். ஸாகேதம் ஸ்ரீநரஸிம்ஹாசாரியர் எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். அங்கிருந்து 11 மைல் தூரமுள்ள மீனம்பாக்கத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் ஆராதித்தார். அங்கிருந்து 8 மைல் தூரமுள்ள எழும்பூருக்கு எழுந்தருளியாயிற்று. 26-4-56ல் ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்கார். ஸ்ரீ A·N பரசுராமன் வக்கீல், ஸ்ரீராமஸ்வாமி ஐயங்கார் முதலியவர்கள் ஆராதித்தார்கள். அன்று திருமஞ்சனமும் டோலோத்ஸவமும் நடந்தது. அங்கிருந்து 10 மைல் தூரமுள்ள புழலேரி பங்களாவிற்கெழுந்தருளியாயிற்று. அங்கிருந்து 10 மைல் தூரமுள்ள திருக்கள்ளத்திற்கு எழுந்தருளியாயிற்று. 28, 29, 30, மூன்று தினங்கள் கந்தாடை ஸ்ரீகிருஷ்ணமாசாரியரும், அவர் தம்பி ஸ்ரீ துரைஸாமி என்கிற வெங்கடாசாரியரும் ஆராதித்தார்கள். 29உ ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள்.

திருக்கள்ளத்திலிருந்து 6மைல் தூரமுள்ள பண்டிதகாவனூருக்கு எழுந்தருளினார். 1-5-56ல் அவ்வூரில் ப்ரபல மிராசுதாரரான திருவேங்கடாசார் பெருமாளை ஆராதித்து டோலையும் நடத்திவைத்தார். அன்று ராத்ரி புறப்பட்டு 13மைல் தூரமுள்ள கும்மிடிபூண்டி பங்களாவிலெழுந்தருளியிருந்தார். அன்றிரவு புறப்பட்டு 17 மைல் தூரமுள்ள தடாவுக்கெழுந்தருளி அங்கும் பங்களாவில் எழுந்தருளியிருந்தாயிற்று. அங்கிருந்து புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள சூளூர்பேட்டைக்கெழுந்தருளினார். அங்கு சித்ரகூடத்தில் எழுந்தருளியிருந்தார். அங்கிருந்து 18 மைல் தூரமுள்ள நாயுடுபேட்டை பங்களாவுக்கெழுந்தருளியாயிற்று. அங்கு 5உ எழுந்தருளியிருந்தார். போகிகளின் ப்ரார்த்தனையின்பேரில் 6ந்தேதியும் நாயுடுபேட்டையிலெழுந்தருளியிருந்தார். 6ந்தேதி ராத்ரி புறப்பட்டு 18 மைல் தூரம் உள்ள கூடூருக்கெழுந்தருளியாயிற்று. அங்கு அழகர் ஸந்நிதி கண்ணாடியறையில் எழுந்தருளியாயிற்று. மதுராந்தகம் ஸ்ரீநரஸிம்ஹாசாரியர்

முதலியவர்கள் பெருமாள் எழுந்தருள யதா சக்தி ஏற்பாடு செய்திருந்தார்கள். த்வாதசி யங்கு அன்று நடந்தது. 7ந்தேதி ராத்ரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள வெங்கடாசல சத்ரம் எழுந்தருளினார். அங்கு சத்ரத்தில் எழுந்தருளியிருந்து ப்ரதோஷாராதனத்தைக் கண்டருளி அன்றிரவு 8 மைல் தூரமுள்ள நெல்லூர் எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ அழகியசிங்கரும் பக்கத்திலுள்ள சத்ரம் விசாலமா யிருந்தபடியால் அதில் பெருமாளுமெழுந்தருளியிருந்தார்கள். 8-5-56 ஊரார் பொதுவில் டதாசக்தி ஆராதித்தார்கள். மறுநாள் டாக்டர் ஸ்ரீ ராமய்யங்கார் ததீயாராதனையைப் பண்ணிவைத்து பரிஜனங்களையும் ஆராதித்தார். நெல்லூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீதேசிகனும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் மூலவர் உத்ஸவர் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டு நன்றாக ஸேவை ஸாதிக்கிறார்கள். திருவேங்கடமுடையானும் கிழக்குமுகமாக ப்ரதிஷ்டை பண்ணப்பட்டு ஸேவை ஸாதிக்கிறான். ஆனால் அந்த மடம் ஸந்நிதி அவ்வூரிலுள்ள ஸ்ரீ திருவேங்கடாசாரியரென்பவரால் அப்போதுள்ள ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின்பேரில் நிர்மாணிக்கப்பட்டது. அவ்வூரில் கலாவைஷம்யமும் ஸம்ப்ரதாயவைஷம்யமும் கொஞ்சமுமில்லாமல் எல்லோரும் ஷஷ்டி ஸந்நிதி திருநக்ஷத்ரம் முதலியவைகளை ஸ்ரீஸந்நிதிக்ரமப்படியே நடத்திவருகிறார்கள். காலத்தை யுத்தேசித்து ஷஷ்டி ஸந்நிதிக்கும் தகுந்த பரிஹாரத்தைப் பண்ணி ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் பண்ணி கோஷ்டியை நடத்தியாயிற்று.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமி

நிகழும் துர்முகி ௵ சித்திரை ௴ 22௳ (4-5-56) வெள்ளிக்கிழமை நவமியில் ஸாயாஹ்னத்தில் ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமி என்ற ப்ரக்யாத ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் 'தஸ்மாத்ரங்கம்மஹாபுண்யம்' என்றும் 'யாவத் சரீரபாதமத்ரைவ' என்றும் பலபடி பல மஹநீய ஆசார்யவர்யர்களால் வரிக்கப்பட்டுவரும் பூலோக வைகுண்டத்தில் அந்திமகால ப்ரதீக்ஷர்களானைப் போல் க்ருதக்ருத்யோத்தமாய் காலப்ரதீக்ஷை செய்து பரமபதித்துவிட்டார் தமது 84-வது திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீ அஹோபிலமடாதீனமான ஸ்ரீரங்கம் தசாவதாரன் ஸந்நிதியில், உத்தரகைங்கர்யங்கள் உத்தமாநுஷ்டாதாவான சக்ரவர்த்தி ஸ்ரீ C. V. ராஜகோபாலாசாரியரைக்கொண்டு ஷஷ்டி ஸந்நிதியில் உபயவேதக்ரந்தாதிபாராயணங்கள் ததீயாராதனைகளுடன் ஸம்ப்ரமதமமாக நடைபெறுகின்றன. கைங்கர்யம்பெங்களூர் ஸ்ரீ நாராயண ஐயங்கார் முதலியவர்களாலும் உள்ளூரிலிருக்கும் இரு இஞ்ஜினீயர்கள் ஸ்ரீகிருஷ்ணமாசாரியர்களாலும் அநேக ஆஸ்திகர்களின் ஒத்துழைப்பைக்கொண்டும் நடத்தப்படுகின்றன.

ஸ்ரீஸ்வாமி தஞ்சாவூரை யடுத்த க்ரதஸ்தானம் என்ற தில்லைஸ்தானத்தில் ஸாதுகுலத்தில் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் 'ஜநித்வாஹம் வம்சேமஹதியசஸி' என்றபடி ஸ்ரீ அஹோபிலமடம் 24-வது பட்டம் ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன் திருவம்சத்தில் அவதரித்து உசித காலங்களில் உபநயநாதி ஸம்ஸ்காரத்துடன் பூர்வம் க்ரமாந்தாத்யாயியாய் பிறகு திருவையார் ஸம்ஸ்க்ருதகலாசாலையில் வ்யாகரணாதிசாஸ்த்ராப்யாஸம் செய்து ஸுமேதையாய் திவ்யப்ரபந்த ஜ்ஞானயுக்தராய் விளங்கி ஸ்ரீ அஹோபிலமடம் 37-வது பட்டத்தில் பரமோதாரராய் விளங்கிய ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கர் முதலாக ஆசார்யர்களிடம் க்ரந்த சதுஷ்டயாதிகள் காலக்ஷேபம் செய்து வேதாந்தவிஜ்ஞாநஸுநிச்சிதார்த்தராய் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கர் காலம் முதல் வெகுவாக ஸ்ரீஸந்நிதியிலேயே இருந்து பலவிதகைங்கர்யங்களில் அந்வயித்து விசேஷமாய் 38-வது பட்டம் ஸ்ரீதிருக்குடந்தை அழகியசிங்கர் காலத்தில் திருமாற்கரவு என்றபடி யதோசிதசேஷத்வம் பலபடியாலும் பெற்று ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்ணாநுக்ரஹ

பாத்ரராகி அவ்விடத்திலேயே ஆத்மரக்ஷா பரத்தையும் ஸமர்ப்பித்து நிறம் பெற்றார். ஆசார்யபக்திச்ரேஷ்டராயும் வைராக்யசித்தராயும் எழுந்தருளியிருந்தது ஸ்ரீஸ்வாமியால் கொண்டாடப்பட்ட ஜகத்ப்ரஸித்தமான ஸ்வாசார்ய உத்ஸவாதிகளாலும் கைங்கர்யங்களாலும் ப்ரதர்சிதமாயிற்று. ஸ்ரீஸ்வாமியால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர்ஸம்பந்தமான உத்ஸவங்களின் வைகரி லோகோத்தரமும் வசாமகோசரமு மென்பது ஸர்வவிதிதம் ஸர்வக்ரவிதிதம். பூர்வாச்ரமத்திலும் ஸந்யாஸாச்ரமத்திலும் ஸ்ரீ ஸ்வாமி செய்த திவ்யதேச யாத்ரை அளவிட முடியாதது வ்ருத்தாந்தங்கள் மிக விரியும். 39-வது பட்டம் ஸ்ரீமன்னார்குடி அழகியசிங்கர் காலத்திலும் ஸ்ரீஸந்நிதிக்கு அடிக்கடி எழுந்தருளி ஆராதனாதி பஹுப்ரகாரங்களிலீடுபட்டு பின் 40-வது பட்டம் திகந்தவிச்ராந்தகீர்த்திப்ரபாவரான ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனிடம் உகந்து துரீயாச்ரமம் பெற்று வைராக்யநிஷ்டராய் ஆஸேதுஹிமாசலம் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஆங்காங்கு ஆஸ்திகர்களால் ஆதரத்துடன் ஆராதிக்கப்பெற்று ஆச்ரிதர்க்குஅவரவர்க்கநுகுணமாகஆமுஷ்மிகச்ரேயஸ்கரமான பஞ்சஸம்ஸ்கார காலக்ஷேப ப்ரதான பரஸமர்ப்பணாதிகளைச் செய்துவந்தார். முக்யமாக ஆசார்யபக்திக்கு விளைநிலமோ திருத்துழாய்க்கு விளைநிலமோ என்று சங்கிக்கும்படியான (துளஸீகானநம்) பெங்களூர் துளஸீதோட்டம் ஸ்ரீ ஸ்வாமி உகந்தருளின பரமஸ்தாநம், சித்ரகூடப்ராந்தம் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனுக்குப் போல. அங்குள்ள பாகவதர்கள் சவியாச்ரத்தாபக்தியுடன் ஸ்ரீஸ்வாமியை அநேக ஸம்வத்ஸரங்கள் ஆராதித்தார்கள். சென்ற சில வருஷங்களாக நம் ஆழ்வாராசார்யர்களாலும் பலபடி கொண்டாடப்பட்ட திருவரங்கத் திருநகரில் அந்திம தசாப்ராப்தியில் இறையவன் இணையடிகளை இறைஞ்சி இருதயத்திருத்தி இமையோர்க்கும் இச்சித்தால் எட்டா எழிலுலகம் எய்திய செய்தி பரமபதநிலயந்தே பரம உத்ஸாஹப்ரதமாயினும் அன்றுமுதல் அன்றீன்ற கன்றிற்கு ஆவையனைய அண்டின. அடியார்க்கு அத்யாதரத்துடனாத்மஜ்ஞானத்தை யளித்து வந்த அவ்வாசார்யவள்ளலின் அந்தர்தானம் ஆஸ்திகர்கள் அனைவருக்கும் ஓர் அந்தகார ப்ராயமாகவும் ஆறொணாத் துயரமும் ஆகத் தடையில்லை.

ஸ்ரீ ஸ்வாமி செய்துள்ள கைங்கர்யங்கள்

ஸ்ரீ ஸ்வாமி தம்மிடம் ஆஸ்திகர்களாலபிமானத்துடன் அளிக்கப்பட்ட ஸத்த்ரவ்யங்களை அநேக ஸந்நிதிகளில் சாச்வதமான கட்டிடங்கள் முதலான பகவதுபயுக்தகைங்கர்யங்களைச் செய்து பகவதர்ப்பணம் செய்துவிட்டார். தம் அவதார ஸ்தானமான தில்லைஸ்தானத்தில் அக்ரஹாரம் மேல்கோடியில் ஓர் கட்டடம் நிர்மித்து அதில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் முதலான எம்பெருமான்களுடன் திருவாராதனோபயுக்த பூஸ்திதிகளுடன் ஸ்ரீஅஹோபிலமடத்தாதீனத்திற்கு அர்ப்பித்து விட்டார். சோதி மழிசை மகிழ்ந்தருளிய பெரும்புலியூரில் எம்பெருமானுக்கு ஒருகாலத் திருவாராதனத்திற்கும் ஸ்வாசார்யனுடைய ப்ரதிமாஸ திருநக்ஷத்திரத்திற்கும் ஸப்ருத்தமாய் விளைநிலங்களும் ஸமர்ப்பித்ததுடன் பஹுத்ரவ்யஸாத்யமான பகவதுபயுக்த மண்டபங்களையும் கட்டியருளினார். ஸந்நிதிக்கு வெளியில் ரமணீயமான மண்டபம் திவ்யமான தீர்த்தவசதியுடன் கட்டி ஸமர்ப்பித்தது ரிஷ்யாச்ரமம்போல் உத்ஸவகாலங்களில் இன்றுமாஸ்திகர்களுக்கு அனுஷ்டானோபயோகியாய் விளங்குகிறது. விச்ராந்தியோக்யமாயு மிருக்கிறது. நெடுந்தெரு அக்ரஹாரத்தில் ஓர் கட்டடம் கட்டி ஸ்ரீஸந்நிதிக்கு ஸமர்ப்பித்தாயிற்று. உலக மேத்தும் திருக்கண்டியூரில் தென் ப்ராகாரத்தில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியையும் பெருமாள் ஸந்நிதியையும் இணைத்துக்கட்டிய இணையற்ற ஓர் தீர்க்கமான கல்மண்டபகைங்கர்யம் வெகு அழகு. மற்றும் உத்தம கைங்கர்யங்கள் பல பல வாசாமகோசரம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[தூர்முகி ஸூ உத்தராயணம் - வஸந்த ருது - வ்ருஷபமீ 1956 மே - ஜூன் மீ]

14-5-56	வைகாசி மீ 1உ	திங்கட்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
15-5-56	2உ	செவ்வாய்க்கிழமை	சூன்ய திதி.
20-5-56	7உ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி.
23-5-56	10உ	புதன்கிழமை	விசாகம்; நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்; ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தி.
24-5-56	11உ	வியாழக்கிழமை	* சந்த்ரக்ரஹணம்.
26-5-56	13உ	சனிக்கிழமை	கேட்டை; 35-வது பட்டம் ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
31-5-56	18உ	வியாழக்கிழமை	அவிட்டம்; 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவ வேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
4-6-56	22உ	திங்கட்கிழமை	ஏகாதசி திதி.
5-6-56	23உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
6-6-56	24உ	புதன்கிழமை	பரணி; 39-வது பட்டம் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்
8-6-56	26உ	வெள்ளிக்கிழமை	● அமாவாஸ்யை.
12-6-56	30உ	செவ்வாய்க்கிழமை	வ்ருஷப சுக்ல சதுர்த்தி திதி.
13-6-56	31உ	புதன்கிழமை	பஞ்சமி-ஷஷ்டி திதித்வயம்.

[உத்தராயணம் க்ரீஷ்மருது மிதுந மீ]

14-6-56	ஆனி மீ 1உ	வியாழக்கிழமை	மிதுநரவி 19-44 ஷடசீதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
15-6-56	1உ	வெள்ளிக்கிழமை	சூன்ய திதி.
18-6-56	5உ	திங்கட்கிழமை	ஏகாதசி திதி.
19-6-56	6உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம். ஸ்வாதி; பெரியாழ்வார் திருநக்ஷத்திரம்
21-6-56	8உ	வியாழக்கிழமை	அனுஷம்; ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்திரம்
22-6-56	9உ	வெள்ளிக்கிழமை	○ பூர்ணிமை திதி.
23-6-56	10உ	சனிக்கிழமை	ப்ரதமை திதி.
24-6-56	11உ	ஞாயிற்றுக்கிழமை	த்விதீயை திதி,
25-6-55	12உ	திங்கட்கிழமை	அதிதி.

குறிப்பு:— 1. ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்து கணிதப்படி அஹர்மானத்தை அநுஸரித்து 24-6-56 ல் த்விதீயை திதியை அநுஷ்டிக்கவேண்டியது. 25-6-56 ல் அதிதி. 28- நெ. பஞ்சாங்கத்து கணிதப்படி 24-6-56 ல் அதிதியும் மறுநாள் த்விதீயை திதியும் அநுஷ்டிக்க வேண்டியது.

2. ஆவணி மீ ச்ரவணத்தில் சாகாதீசனுன குருவுக்கு அஸ்தமன தோஷமிருப்பதால் ருக்வேதிகள் ஆடி மீ 9 உ செவ்வாய்க்கிழமை (24-7-56) ப்ரதமோபாகர்மாவைச் செய்யவேண்டியது. த்விதீயாத்யுபாகர்மாவை ஆவணி மீ ச்ரவணத்திலேயே அநுஷ்டிக்க வேண்டியது.

*24-5-56 வைகாசி மீ 11உ பூர்ணிமை திதி ச்ராத்தத்தை மறுநாள் அநுஷ்டிக்க வேண்டியது.

ஸ்ரீ:

கீழ்க்கண்ட புஸ்தகங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

1. அதிகரணஸாராவளி — ரூ. 7—0—0
   (சிந்தாமணி கல்பதரு வ்யாக்யானங்களுடன் கூடியது)
   ஷை பைண்ட் செய்யாதது — 5—0—0
2. விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம் (அகாரதி) — 20—0—0
3. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் (முதல் பாகம்) (ஸ்ரீ ஸாரபோதினீவ்யாக்யானத்துடன் கூடியது) — காலிகோ பைண்ட் 6—8—0; பாதி காலிகோ 6—0—0
   ராப்பர் பைண்ட் — 5—8—0
   (ஷை புஸ்தகம் இரண்டாவதுபாகமும் இதேவிலை விகிதத்தில் கிடைக்கும்)
4. சாற்றுமுறைக்ரமம் — 0-12—0
5. யஜுஸ்ஸந்த்யாவந்தனபாஷ்யம் — 0-12—0
6. ஸ்ரீ ஸந்நிதி நித்யாநுஸந்தானக்ரமம் (கோயில் திருவாய் மொழி, ராமாநுஜநூற்றந்தாதிகளுடன் கூடிய இரண்டாம் பதிப்பு) — 0-10—0
   ஷை பயிண்டுசெய்தது — 0-12—0
7. ஸ்ரீ அஹோபிலமடமும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரமும் — 0—2—0
   (சித்திரங்களுடன் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் கிடைக்கும்)
8. ஸ்ரீ ஸந்நிதி தனியன்கள் — 0—3—0
9. வைபவஸுதா (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யசரிதம்) — 1—4—0
10. கைசிகமாஹாத்ம்யம் (பட்டர் வ்யாக்யானத்துடன் கூடியது) — 0—5—0

வி. பி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. (போஸ்டேஜ், பாக்கிங் செலவு தனி)

அட்டையில் அச்சிட 'திருவல்லிக்கேணி ரங்கநாதன் ப்ளாக்கை'க் கொடுத்துதவிய 'பக்தன்' ஆசிரியருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸாரபோதிநீ

(இரண்டாவது பாகம்)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸார போதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீஅஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். ஸித்தோபாயசோதநாதிகாரம் முதற் கொண்டு நிகமநாதிகாரபர்யந்தமான இந்த இரண்டாவது பாகம் மன்மத வருஷம் தை மாதம் உத்திராடத்திருநன்னுளில் வெளியாகியிருக்கிறது. இந்த பாகமும் உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை வருமாறு:—

(Full)	புல் காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய் 6-8-0
(Half)	ஆப்காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய் 6-0-0
(Wrapper)	ராப்பர் பயிண்டு புத்தகம்	ரூபாய் 5-8-0

புஸ்தகத்தை அபேக்ஷிக்கும் ஆஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர். (செங்கல்பட்டு ஜில்லா)

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டே அனுப்பவேண்டும். புத்தகம் வேண்டியவர்கள் அதன் விலையில் பாதியையாவது முன்பணமாக அனுப்பினுல் வி. பி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.